26 வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
அரைச்சலார்
23-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

Registered at the G. P. O. as a Newspaper
வாரப்பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 150
தேசிய தினசரி National Tamil Daily
விசுவாவசு ஆனி 27 ரபி அவ் பிறை 11 (11-7-65) ஞாயிறு

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

# மொழி இலாகாவில் நாச வேலை

## அரசாங்கத்துக்கும் தமிழருக்குமிடையே நெருக்கடி ஏற்படுத்த முயற்சி ?

### சில அதிகாரிகள் மீது கண்காணிப்பு

கொழும்பு, சனி

மொழி இலாகாவில் நடைபெற்றுவரும் நாசவேலைகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சில அதிகாரிகள் மீது விரைவில் நடவடிக்கை எக்டுகப்படவிருக்கின்றது. தேசிய அரசாங்கத்துக்கும் தமிழர்களுக்குமிடையே நெருக்கடியை ஏற்படுத்துவதே இந்த "நாசவேலை அதிகாரிகளின்" முக்கிய வேலையாக விருக்கிறது எனத் தெரியவருகிறது.

மொழி இலாகாவுக்கு யாரும் தமிழில் கடிதம் எழுதினால், அக்கடிதங்களைத் திருப்பி அனுப்புவதுடன் ''சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால் தான் உமது கோரிக்கை பரிசீலிக்கப்படும்'' என்று குறிப்பு எழுதி தமிழ்க் கடிதங்களைத் திருப்பி அனுப்புவதில் சில அதிகாரிகள் தீவிரமாக [illegible]பட்டுவருவது இப்பொழு[illegible] கண்டுபிடிக்கப்பட்டுள்[illegible]. மொழி இலாகாவை[illegible] சேர்ந்த ஒரு உயர் அதிகா[illegible] இப்படியான கடிதமொன்றை றகிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்துக்கு அனுப்பியதைத்தொடர்ந்து நீதி மந்திரி செனட்டர் விஜயமன்னேயுடன் திரு. இரத்தினம் இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இவ்விஷயம் தமிழ் எம். பி. க்களுக்கு ஓரளவு புரிந்திருப்பதால்இதுகுறித்து அவர்கள் விழிப்புடன் இருப்பதாகவும் முக்கியமாக மொழி விஷயத்தில் வேண்டுமென்று சிக்கல்களை, குழப்பங்களை ஏற்படுத்தும்மொழி இலாகா அதிகாரிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று அவர்கள் கோர[illegible]ருப்பதாகவும் தெரியவருகிறது.

மொழி இலாகாவில் சில அதிகாரிகள் . மேற்கொள்ளும் சதி நாசவேலைகள் குறித்து அரசாங்கமும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதாகவும், இப்படியான கண்காணிப்பு நடவடிக்கைகளை விரைவில் அரசாங்கம் மேற்கொள்ளுமென்றும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

"தமிழ[illegible] [illegible]

# சிங்களம் கற்குமாறு வற்புறுத்தக்கூடாது

## அப்படியான கட்டம் உருவானால் அரசாங்கத்தை எதிர்ப்பேன்"

—யாழ்ப்பாண எம். பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழாசிரியர்கள்சிங்களம் கற்கவேண்டுமென்று,தேசிய அரசாங்கம் தீர்மானிக்குமானால் அந்த அரசாங்கத்தை முழுமையாக எதிர்ப்பேன் என்று அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அகில இலங்கைதமிழ் ஆசிரியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 28-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நேற்றையதினம் திரு. இ. பொ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;-

ஆசிரியர்களுக்கு இடமாற்றம் இருக்கக்கூடாது என்பதைப் பரிபூரணமாக ஆதரிக்கிறேன். ஆனால் ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு எல்லாவற்றையும் சீர்கேடுள்ளதாக்கி வருகிருர்கள்.

### அரசியலுரிமையும் ஆசிரியர்களும்

ஆசிரியர்களுக்கு அரசியலுரிமை வழங்கப்படலாமா என்ற கேள்வி தற்போது ஆசிரியர்களிடையே பெரும் கேள்வியாக இருந்துவருகிறது. என்னைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் வெளியே அரசியல் பேசக்கூடாது என்றகொள்கையை முற்ருக எதிர்க்கிறேன். ஆசிரியர் ஒருவர் கூறுவதை மாணவர்கள் சுலபமாக நம்பிவிடுவார்கள். ஆகையால் ஆசிரியர் பாடசாலைகளில் அரசியலுரிமையற்றவர்களாகவும், வெளியே அரசியலுரிமையுள்ளவர்களாகவுமிருப்பதே நல்லது.

### திருமண அழைப்பு

மணமகன் — டாக்டர் யோகானந்தா (ஓய்வு பெற்ற வைத்திய அத்தியட்சகர் டாக்டர் V. T. பசுபதியின் மகன்)

மணமகள் — டாக்டர் நளாயினி (வவுனியா வைத்திய அத்தியட்சகர் டாக்டர் K. சிவஞானரத்தினத்தின் மகள்)

இடம் — கொழும்பு கிரீன்பாதிலுள்ள புதிய நகர மண்டபம்.

நேரம் — ஆனி 30 (14-7-65) இரவு 6-30—8-30.

(உறவினரும் நண்பர்களும் தயவுசெய்து இதையே நேர்முக அழைப்பாகக் கொள்ளவும்) 447

### "ஈழநாடு" மீலாத் மலர் (12—7—65)

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாளைய "ஈழநாடு' இதழ் மீலாத் மலராக வெளியாகிறது.

# மாவட்ட சபைகள் ரட்டசபைகளை ஒத்திருக்கும்

## காலியில் அமைச்சர் திருச்செல்வம்

வெள்ளவத்தை, சனி

''சிங்கள மன்னர் காலத்தில் இலங்கை ரணசபா, ரட்டசபா முதலிய சபைகளால் ஆளப்பட்டுவந்தது. தேசிய அரசாங்கம் விரைவில் அமைக்கவிருக்கும் மாவட்ட சபைகள் ரட்டசபாக்களை போலவே இருக்கும்'' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் காலி மாவட்டத்தில் உள்ள ஸ்தலஸ்தாபன சபைகளின் தலைவர்கள் அளித்த நண்பகல் விருந்தொன்றில் இன்று பேசுகையில் குறிப்பிட்டார். அமைச்சர் திருச்செல்வம் இவ்வாறு குறிப்பிட்டதும் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட பிரமுகர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

தபரெலுவ கிராமசபை நூல்நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் திருச்செல்வம் குறிப்பிட்டதாவது:

தமிழர்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்துவருகிருர்கள். அவர்கள் தொடர்ந்து வாழப்போகிறவர்கள். தங்கள் பிரதேசங்களில் தங்கள் மொழியான தமிழில் நிர்வாகம் நடத்தவேண்டும். கடந்த ஒன்பது ஆண்டுகளாக மொழிப்பிரச்னை நாட்டை பிளவுபடுத்தியது. வெகுவிரைவில் இப்பிரச்னை தீர்த்துவைக்கப்படும். வேலையில்லாத்திண்டாட்டம் விரைவில் தீர்த்து வைக்கப்படவேண்டியது. இளைஞர்களுக்கு உரியமுறையில் கல்வி புகட்டவேண்டியதும் அவசியமாகும். நாட்டின் நிதி நிலைமை மட்டும் குறைந்திருக்கவில்லை தொழில்நுட்ப நிபுணர்களின் பற்ருக்குறையும்நாட்டு அபிவிருத்திக்கு இடையூறு விளைத்து வருகிறது. உதாரணமாக எனது அமைச்சில் நில அளவையாளர் தட்டுப்பாடு நிலவுகிறது. ஸ்தலஸ்தாபனசபைகள் மூலம் நாட்டின் சகல பகுதிகளிலும் வடிகால்வாய்களை அமைக்க நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

### யாழ்ப்பாண[illegible] வரும் அமைச்ச[illegible] திருச்செல்வம்

வெள்ளவத்தை, சனி

ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வம் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார். மந்திரியுடன் நாடு நகர திட்ட வல்லுநர் திரு. குணரத்தினவும் வந்து யாழ்ப்பாண மாதிரிச்சந்தையை இருவரும் பார்வையிடுவர்.

### இன்று

அகில இலங்கை கிறிஸ்தவ வாலிப முன்னணியின் ஆதரவில் கூட்டமும் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும் இன்றுமாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும். இவ்விழாவில் இலங்கையையும் பிற நாடுகளையும் சேர்ந்த வாலிபர்களின் சொற்பொழிவுகளும் இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெறும்.

இன்று நடைபெறும்தேவ நற்கருணைத் திருநாளை முன்னிட்டு சுன்னுகம் சந்தை மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் கட்டளைக்குரவர் வண. பிதா பீற்றர் பிள்ளை உரை நிகழ்த்துவார்.

# பொடி அப்புஹாமிக்கு தூக்குத் தண்டனை

## மங்களஎலியா கொலை வழக்கில் தீர்ப்பு

நீர்கொழும்பு, சனி

23 நாட்களாக விசாரணைகள் நடைபெற்ற மங்களஎலியா கொலை வழக்கில், எதிரியான ஆர். பி. பொடி அப்புஹாமிக்கு நீர்கொழும்பு அசைஸ் கோர்ட்டில் அசைஸ் கமிஷனர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசுவாமி நேற்று மரணதண்டனை விதித்தார்.

இந்த வழக்கில் மங்களஎலியா கொஸ்வத்தையைச் சேர்ந்த இளம்பெண் டி. விமலாவதியைக் கொலை செய்ததாக பொடி அப்புஹாமி மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர்,எதிரியைப்பார்த்து நீதிபதி; ''நீர் எதுவும் சொல்ல விரும்புகிறீரா'' என்று கேட்ட பொழுது, தாம் இக்குற்றத்தைச் செய்யவில்லை என்றும் பொலிஸ் அதிகாரிகள் இந்த வழக்கைச் சிருஷ்டித்துள்ளனர் என்றும் எதிரி கூறினார்.

தூக்குத்தண்டனை அடுத்த மாதம் 19-ம் திகதி நிறைவேற்றப்படும் என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

## கந்தபுராணம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகிய பெருங்கடலில் படிந்து அதன் கருத்தாகிய நீரை முகந்து தமிழ்மழையாகப் பொழிந்திருக்கின்றார். அதனாலே தமிழகத்தில் முருகனின் அருள் வெள்ளம் பெருக்கெடுத்தோடுவதுடன், முருகப்பெருமானைத் தலைவனாகக் கொண்ட ஒரு பெரும் காப்பியமும் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ளது. இலக்கணநூலாசிரியர்கள் வகுத்துக்கூறும், மந்திரம், தூது, இகல், வென்றி, புனல் விளையாட்டு, மலர் கொய்தல், இருசுடர்த் தோற்றம் முதலிய பெரும் காப்பிய இலக்கணங்கள் குறைவறத் தன்னுட் பொருந்தப்பெறும் சிறப்பையுடையது கந்த புராணம். தொல்காப்பியர் கூறும் எட்டுவித மெய்ப்பாடுகளும் கந்தபுராணத்தில் தெளிவாகக் காணக் கூடியதாகவிருக்கின்றன. தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலில் கூறப்படும் அநேக அணிகளுக்குக் கந்தபுராணச் செய்யுள்களை உதாரணச் செய்யுட்களாக உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ளார்கள். சுந்தரமூர்த்திநாயனாரின் காலத்திற்குப் பின் வாழ்ந்தவராகக் கருதப்படும் கச்சியப்பர், நாயன்மார் சரித்திரத்தில் நிகழ்ந்த அற்புதங்களை தமது பாடலில் உவமைகளாக எடுத்தாண்டுள்ளார். உதாரணமாக ஒன்றைப்பார்ப்போம். பாலியாறு பாய்ந்துவருகின்றது. ஆனால் மீன்கள் ஆற்று நீரைப் பிரித்துக்கொண்டு எதிர்த்திசை நோக்கிச்செல்கின்றன. ஞானசம்பந்தர் சமணருடன் புனல்வாதம் செய்தபொழுது திருப்பாசுரம் எழுதப்பெற்ற ஏட்டை வைகை நதியில் இட்டார். அந்த வைகைநதி நீரைக் கிழித்துக்கொண்டு எதிரேறிச் சென்றது. அந்தச்சம்பவத்தை மீன்கள் ஆற்று நீரைக்கிழித்து எதிரே செல்வதற்கு உவமையாக்குகிறார். வைகை நதி, மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரப் பெருமான் மண் சுமந்து கரைகட்டிய பெருமையுடையது என்பதையும் அப்பாட்டிலே கூறிவிடுகிறார்.

"உதிருகின்ற சிற்றுண்டி
கொண்டொலிபுனற்
சடைமேல்
மதுரை நாயகன் மண்சுமந்
திட்ட மாநதியின்
முதிரு முத்தமிழ் விரகன
தேடென மொய்ம்மீன்
எதிர்பு குந்திடப்போவது
பாலியாமியாறு."

வள்ளுவரின் பல கருத்துக்கள் நூலிற்பல இடங்களிலும் பரந்து காணப்படுகின்றன. சைவசித்தாந்தத்தின் நுட்பமாகிய கருத்துக்கள் தெளிவாகவும் மனதில் பதியும் வண்ணமும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. இப்புராணச் செய்யுட்கள் அமைதியான ஆற்றுநீரோட்டம்போன்ற தூய தமிழ் நடையில் பக்திச்சுவை நனி சொட்டச்சொட்ட பாடப் பெற்றுள்ளன. அந்த அன்பு மழை வெள்ளம் பெருக்கெடுத்தோடியதால் துயரத்தைத் தரும் பிறவியெனும் வெப்பம் நீங்கி தமிழ் உலகம் உய்வடைந்தது.

"போதமுறு சூதமுனி
புகன்ற காந்தப்
புகழ்க் கடலிற் படிந்த
தன்கட் பொருளதான
மேதகுவன் புனவருந்தி
வையமுய்ய
வெய்யதுயர்ப் பிறவி
யெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்
காஞ்சிக் குவட்டிலேறிச்
சலதியமுதினை நிகர்செந்
தமிழதான
காதன்மழை பொழிந்த
அருட் கொண்டலான
கச்சியப்பன் இருபாதம்
உச்சி வைப்பாம்."

(வளரும்)


# வரி விளம்பரம்

**தேவை**

சேலைகளுக்கு குஞ்சம் (ரசல்) இணைக்கத் தெரிந்த பெண்மணிகள் தேவை. தையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. அன்னம்ஸ் சாறி வேக்ஸ் விக்னேஸ்வரா ரெக்ஸ்ரைல்ஸ், மேல்மாடி, 27, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 619

**கல்வி**

**சிங்கனம்**

ஆரம்ப சிங்கள வகுப் பொன்று அண்மையில்ஆரம்பிக்கப் படவிருக்கின்றது. சேர்ந்து கல்வி பயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும். G. C. E. பரீட்சையில் 8 மாதத்தில் சித்திபெறலாம். A. P. டானியல், தபாற்கந்தோரடி, கரவெட்டி. 591

**தேவை**

அன்னம்ஸ் சாறி இன்டஸ்ரீஸில் நெசவுவேலை செய்வதற்கு திறமை உள்ள பெண்மணிகள் உடன் தேவை. போடிங் வசதி உண்டு. விபரங்களுக்கு: விக்னேஸ்வரா ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம், அன்னம்ஸ் சாறி வேக்ஸ், 27, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்; அன்னம்ஸ் சாறி இன்டஸ்ரீஸ், கோயில்வீதி, கொக்குவில். 618

தொய்வு, சுசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


**வைத்தியம்**

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, தீட்டு இறைத்தல், புத்திரப்பேறு. தகுந்தமுறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 586

**தேவை**

நெல்லிஇரசம் வீடுகளுக்கு சென்று விற்பதற்கு பெண் விற்பனையாளர் தேவை. 13-7;65 க்கு முன் நேரில் வரவும். 44/3 கல்லூரி ஒழுங்கை, நீர்வாவியடி. யாழ்ப்பாணம். 629






# அழகினுக்கு மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும்
எண்ணெயை அகற்றி,
சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான
யௌவன வனப்பை அளிப்பது
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள. கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமததை மிருதுவாக்கி, பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும். அகன்ற மயிர்க்கண்களையும் மறைத்து. சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்றுதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்கமற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து கிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக் க்ரீமை அடித்தளமாக பாவியுங்கள்.




## சருமத்திற்கு புதியதோர் மெருகூட்ட

# பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

## கந்தபுராணம் 1

# நூலாசிரியர் கச்சியப்பர்

— வ. குகசர்மா —

**கருணை முருகன்**

முருகப் பெருமானை கலியுக வரதன் என்று கூறுவர். மக்கள் தம்மை வணங்கிக் கடைத்தேறவேண்டுமென்ற பெருங்கருணையுடனே அவதரித்தவர் முருகப்பெருமான். அவர் எழுந்தருளியுள்ள சிறந்தஇடங்கள் பல. அவற்றுள் திருச்சிரலைவாய் எனத் தமிழ் இலக்கிய நூல்களில் கூறப்படும் திருச்செந்தூரும் ஒன்று. இந்தத்தலம் கடற்கரையிலே உள்ளது. இங்கே எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை ஆதிசங்கரர் பல வடமொழிப்பாக்களால் தோத்திரம் செய்துள்ளார். ஒரு பாவில் பின்வருமாறு கூறியுள்ளார். "இச்சமுத்திரத்திலே அலைகள் பெரிதாகவும் பயங்கரமானதாகவும் எழுந்து வருகின்றன. முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் பக்கமுள்ள சமுத்திரக் கரையை அடைந்தவுடன் அவை அழிந்துவிடுகின்றன. அதுபோல், யார் உண்மையான அன்புடன் முருகப் பெருமான் முன்னர் சென்று வணங்குகின்றார்களோ அவர்களுக்கு முன்வினைப் பயனால் வருகின்ற சகல ஆபத்துகளும் நீங்குகின்றன."

இத்தகைய கருணைக்கடலாம் முருகப் பெருமானைப் பற்றிக் கூறும் பல நூல்கள் தமிழ்மொழியில் உள்ளன. பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் குறிஞ்சிநிலத் தெய்வமாக குன்றுதோறாடும் குமரவேள் குறிப்பிடப்படுகிறார். பத்துப்பாட்டின் முதலாவது பாடலாக "நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப்படை" மிளிர்கின்றது. பரிபாடல் என்னும் சங்கநூலில் முருகன் புகழுரைக்கும் பல பாடல்கள் உள்ளன. அருணகிரிநாதரால் ஆக்கப்பெற்ற திருப்புகழ், கந்தரலங்காரம் கந்தரனுபூதி முதலிய நூல்கள் சிறந்த பாராயண நூல்களாகத் திகழ்கின்றன. ஆனால் முருகப்பெருமானின் வரலாற்றை இலக்கிய நயம்பட சிரிப்புடன் எடுத்துக் கூறும் நூல் கந்தபுராணம் ஒன்றேயாகும். இதற்கு முதன் நூல் வடமொழி ஸ்கந்தபுராணமாகும். வடமொழியில் ஸ்கந்தபுராணத்தை இயற்றியவர் வியாசமுனிவரின் மாணாக்கராகிய சூதமுனிவர். இதைத் தமிழில் பாடியவர் கச்சியப்பசிவாச்சாரியார். இவர் காஞ்சிபுரத்திலே வேதியர் குலத்திலே காளத்திசிவாச்சாரியருக்கு மகனாகப் பிறந்தார். தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் வல்லுநர்.

**தெய்வகாப்பியம்**

முருகன் தமிழரால் போற்றப்படும் சிறப்பான தெய்வமாயிருந்தும் அவரது தோற்றம், பெருமை, வரலாறு முதலியவற்றைக்கூறும் நூல் தமிழில் இருக்கவில்லை. முருகப் பெருமானது சரிதத்தை வடமொழியில் படித்தறிந்த கச்சியப்பர் முருகப்பெருமானின் அருட்பெருங்கடலில் ஆழ்ந்தார். தான் பெற்ற இன்பம் வையகம் பெறவேண்டுமென்னும் பெருவிருப்பினாலும், மேன்மைகொள் சைவநீதி உலகெலாம்விளங்க, மக்கள் யாதொரு குறைவுமின்றி வாழவேண்டுமென்னும் கருணையினாலும், காஞ்சிபுரத்தில் வாழ்ந்த பெருமக்கள் வேண்டுதலின்படி கந்தபுராணத்தைத் தமிழில்பாடினார். கந்த புராணத்தின் முதற்பாட்டின் முதலடியாகிய "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் அடியை எடுத்துக்கொடுத்தவர் முருகப் பெருமானே. அப்பாடலில் குற்றம் கூறிய புலவர் சபையில், தானே ஒரு புலவர் வடிவம் கொண்டு சென்று இலக்கண விதிகாட்டி அது குற்றமல்ல எனத் தெளிவுபடுத்தினார், இதனை,

"மருவு புலவனார்
கவிக்குளே சிறு
வழுவதனை மகா
சபைக்கு ளேகியே
வகைய பெயரதா
இலக்கணவிதி-
மொழிவோனே"

என அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழில் சிறப்பித்துள்ளார். கச்சியப்பர் தாம் பாடிய பாட்டுக்களை ஒவ்வோர் இரவிலும் குமரகோட்டத்தில் எழுந்தருளியுள்ள, முருகப்பெருமான் திருவடியில் வைத்துவிட்டுச் சென்றாரென்றும், காலையில் அப்பாடல்களிற் பிழைகள் திருத்தப் பட்டிருக்குமென்றும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

**அருள் மழை**

பாற்கடலில்நின்றும் தோன்றிய அமுதம்போன்ற இனிய தமிழால் முருகன் பாடிய கச்சியப்பரை மழை பெய்யும் முகிலிற்கு ஒப்பிடுகிறார் கந்தபுராணச்சருக்கம் பாடிய சம்பந்தசரணாலயர். அது மிகவும் பொருத்தமுடையதே. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் வடமொழியில் உள்ள ஸ்கந்த புராணத்தால் ஒரு பிரயோசனமுமில்லை. முகிலின் தன்மையென்ன? "பிறர்க்குதவி செய்யாப் பெருங்கடல் நீர்முகந்து பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு" என்பது பெரியோர் வாக்கு. அவ்வாறே கச்சியப்பராகிய முகிலும் வடமொழிக்காந்த

(2ம் பக்கம் பார்க்க)

# கறுப்பு அடிமையும் மனித உரிமையும்

ழுத்தில் வடிக்கப்படா அரசியல் அமைப்புக் கொண்ட நாடு பிரிட்டிஷ் நாடு. பிரிட்டிஷ் அரசியல் சட்டம் என்று எழுதுகிறோம்; படிக்கிறோம்; சொல்லக் கேட்கிறோம். ஆனால் இதன் உண்மைப் பொருள் எமக்குத் தெரிவதில்லை. தீவுகளில் வாழும் மக்கள் வெளியார் தங்கள் விஷயங்களில் தலையிடுவதை விரும்பமாட்டார்கள். இந்தப் பொதுவிதிதான் ஆங்கிலேயருடைய சுதந்திரப் பற்றுக்குக் காரணம். அவர்களுடைய உணர்ச்சிகளும், பாரம்பரிய பழக்கவழக்கங்களும் கலந்து உருவான 'பண்டம்' தான் பிரிட்டிஷ் அரசியல்சட்டம். சிலசமயங்களில் தங்களுடைய அரசர்களை எதிர்த்து நின்று ஆங்கில மக்கள் தங்களுடைய உரிமைகளை மீட்டிருக்கிறார்கள். மக்கள் குரலை மதியாத மன்னர்கள் போரில் தோற்று, மக்கள் தீர்ப்பால் கொலையுண்டுமிருக்கிறார்கள்.

ஆங்கில நாட்டில் —

நீதிஸ்தலங்கள் 'உரிமைக் காவலர்கள்' என்று சொல்லும் வகையில் இயங்குகின்றன. கலங்கரைஒளிபோன்ற இரு வழக்குகளை ஆராய்ந்து இவ்வுண்மையைத் தெளிவாக்குவோம்.

சேர் எட்வேட் குக் பதினைந்தாம், பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் ஒப்பற்ற நீதியரசர். இவர் கொடுத்த தீர்ப்புகள் ஆங்கில மக்களுக்கு ஈடு இணையற்ற வரப்பிரசாதம் எனல் வேண்டும். அவர் எழுதிய புத்தகங்களோ இன்று சட்ட அறிஞர்களால் போற்றப்படுகின்றன.

உணவை உயிர் வாழ்வதற்கு மட்டும் உண்ணும் ஒருவனுடைய மெல்லிய உருவம்; நெடிய உடல்; தீர்க்கமான நாசி; அறிவொளி சிந்தும் கண்கள். இவை சேர் எட்வேட் குக்கின் அங்க இலட்சணங்கள். மொத்தத்தில் அவருடைய உருவம் சுயமாகச் சிந்தித்து அஞ்சாது செயலாற்றும் ஒருவரை நினைவுறுத்தும்!

**பரமா ராஜகோபால்**

ஆபிரிக்காவுக்குச் சென்று திக்கற்ற சுதேசிகளைப் பிடித்து வந்து அடிமைகளாக விற்கும் வழக்கம் ஐரோப்பிய நாடுகளிலிருந்தது. அண்மையில் கூட ஒரு பிரெஞ்சு எழுத்தாளர் தன் உயிரைப் பணயம் வைத்து அடிமை வியாபாரம்பற்றிய பல திடுக்கிடும் செய்திகளைச் சேகரித்து புத்தக உருவமாக வெளியிட்டிருக்கிறார். அவர் சொல்லுவது என்னவெனில்— வடஆபிரிக்காவிலும் மத்தியதரைக் கடலிலும் இன்னும் அடிமை வியாபாரம் நடைபெறுகிறதாம். ஆனால் ஐக்கிய நாடுகள் சபை தொடக்கம் ஒவ்வொரு நாட்டு உள்நாட்டுச் சட்டம் வரை அடிமை வர்த்தகத்தைப் பகிஷ்கரிக்கும் காலம் இது. ஒரு காலத்தில் 'காட்டுமிராண்டி' வியாபாரத்தை உலகம் தள்ளுபடிசெய்யாது இருந்தது என்பதை நினைவுறுத்துகிறோம்.

அப்படியானதோர் காலத்தில்தான் 'சொமசெற்' வழக்கின் (Somerset's Case) தீர்ப்பு திரு. குக் அவர்களால் அளிக்கப்பட்டது. இங்கிலாந்துத் துறைமுகமொன்றில் ஒதுங்கிய ஒரு கப்பலில் வைக்கப்பட்ட அடிமை ஒருவன் நாட்டுக்குள்புகுந்துவிட்டான். அவனை மீண்டும் பெறுவதற்குத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது—

கப்பல் முதலாளிகள் தங்கள் பக்கமே தீர்ப்புக் கிடைக்கும் என்ற எண்ணத்திலே லயித்திருந்தனர்.

முடிக்குரிய வழக்கறிஞர் யார், முதலாளிமாரின் வழக்கறிஞர் யார் என்பது எமக்கு வேண்டாம். என்னென்ன வாதங்கள் அளிக்கப்பட்டன-நீதியரசர் என்ன தீர்ப்புக் கொடுத்தார் என்பது தான் முக்கியம்.

வழக்கைத் தாக்கல் செய்தவர்கள், ஏனைய பொருட்களைப்போல வாங்க, விற்க உரிமை தரவல்லது அடிமை வியாபாரம் என்று வாதிட்டனர். வெள்ளையர் என்ற முறையில் தங்களுக்குக் கறுப்பர் மேல் ஆட்சிசெய்யும் உரிமை உண்டு என்று அடித்துப் பேசினர். முடிக்குரியவர் பழமையில் ஊறியவர் என்றபடியால் அவருடையவாதம் உப்புச் சப்பற்றதாகவிருந்தது.

யாவற்றையும் கேட்ட குக் அவர்கள் அன்று அளித்த தீர்ப்பு இன்றும்தான் பெருமையோடு மேற்கோள் காட்டப்படுகின்றது. இரத்தினச் சுருக்கமாக, "இந்தக் கறுப்பன் விடுதலையாகட்டும்" என்றார் அவர். சராசரி ஆங்கிலேயன் ஒருவனுடைய உணர்ச்சி ஒன்றுதான் அவருக்குத் திசைகாட்டி, புரட்சிப்பாதையில் ஆங்கிலச் சட்டத்தை வழிநடாத்தி வைத்தது.

கூலிவேலை செய்வோர்களுக்கு இங்கிலாந்தில் நல்ல சம்பளம் கொடுக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, பல மேற்கிந்தியர்களும் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்ட வேறு நாட்டவரும் இங்கிலாந்தில் இன்று குடியேறியிருக்கிறார்

(2-ம் பக்கம் பார்க்க)

**கவிதை மலர்கள்**

**கையறு நிலையாற் கவன்று கவிதை**
**பையலை நெக்கிப் பாடிய தாய்க்கு**
**உய்யவோர் வழியை உணர்த்தும் மழலை...**

## ஊனில் உருவில் உளனே தாயே...!

— ம்பி —

அம்மா அம்மா அருமை மகனின்
அழியா அன்பில்
கும்மாளங்கள் போடுந் தளிரின்
குளிர்புன் னகையில்
இம்மா நிலமே இதயங் கனியும்
மழலை நினைவில்
விம்மும் ஒலியும் விழியின் துளியும்
அறிவேன் அம்மா......

○

தாயே தயவே தவமே தலமே
தமிழும் நீயும்
ஓயா துறவாய் உணர்வாய் உயிராய்
உலகில் வாழ்நாள்
தேயா எழிலைத் தேய்த்தென் உருவில்
மகனாய் வந்தேன்
மாயாத் தளிரென் றெனையே தினமும்
மனதிற் கொண்டாய்......

○

கருவில் உருவாய்க் கனவின் நனவாய்க்
கலையின் வடிவாய்க்
குருவாய்க் குலமே குளிருந் தருணங்
குமிழாய்ப் போனேன்.
பிரிவிற் பதியும் பசியும் பிணியும்
பலனும் நீங்கிச்
சொரியும் உவர்நீர்த் துளியில் ஒளிரும்
துணையா னேனே!......

○

தேனும் வேம்பாய்த் தெளியும் தென்றல்
தணலாய்த் தந்தை
தானும் நீயும் தணலிற் புழுவாய்த்
தவிக்கும் படியோ
போனேன் இல்லை இல்லை என்றும்
போவே னோமோ
ஊனில் உருவில் உளமாங் கோயிலில்
வாழ்கின் றேனே......

○

விதியின் சதியால் விளையாட் டெல்லாம்
காட்டிச் சென்றின்
பதியே பாசப் பிணியில் துவளும்
பருவந் தந்தேன்
எதையும் உலகில் நிலையென் றெண் ணின்
உறவே துன்பம்
நிதியும் நிலவும் நினைவுங் கனவாம்
நிறையும் மறையும்......

○

தளிருங் கொடியுந் தமிழோ அழியாத்
தவமோ அல்ல
தெளியும் நினைவில் தினமென் எழிலில்
வரும்பே ரின்பம்
அழியா நிலையில் அலையாய்க் கலையாய்
அழியாத் தமிழாய்
ஒளியாய் உணர்வாய் உயிராய் வாழ்வேன்
வாழ்வேன் அம்மா......

○

## நிலவைத் தேடி...

—மு. சடாட்சரன்—

நெஞ்சுப்புண் ஆற்றுந் தேனே!
நிறைநிலா! கோல வானில்
அஞ்சியோ மறுகு கின்றாய்?
அணிவளை மின்னல் கண்டேன்.
கஞ்சத்தை விஞ்சும் அன்புக்
கனிமுகம் காட்டி நீண்ட
நஞ்சினை அகற்றி எங்கள்
நாநிலம் வாழ வைப்பாய்!

அழித்துயிர் பறித்து மாளும்
அறிவிலார் இதயம் போன்று
வளர்ந்திடும் இருளை ஓட்டும்
வாய்மையின் தெளிந்த ஆற்றே
எழுந்தென துள்ளம் மாய்க்கும்
எரிதணல் நூற்று வாழப்
பழரசம் பிழிவாய் நெஞ்சில்
பகையெலாம் துரும்பாய்ச் சாய!

மாருதன் நெருப்பில் தோய்த்து
மலர்க்கணை தொடுக்க மேலே
கூர்விழி விண்மீன் கூட்டம்
கொன்றிடச் சூழ்ந்து மொய்க்கப்
பேரலைக் கடல் நகைத்துப்
பித்தனென் றிகழ உன்மேல்
மாரிபோல் வாஞ்சை யுற்றேன்
மல்லிகைக் கொத்தே வாராய்!

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EEL^ NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி மீ 27உ (11-7-65)


## கலை இன்பம்

இப்பொழுது நல்லூரிலே சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் பத்து நாட்களாக இசைக் கலைவிருந்து, வந்தவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கப்படுகின்றது. பாரத நாட்டிலிருந்து கலைஞர்கள் வருவதற்குள்ள அநீதியான தடை இன்னும் நீக்கப்படவில்லை. என்றாலும், கொழும்பு முதலிய இடங்களிலிருந்து பல கலைஞர்களும் சிரமம் பாராமல் இங்குவந்து நமக்குக்கலை விருந்தளித்து வருகின்றனர்.

அங்கு மட்டுமல்ல. பல கோவில்களிலும் நடைபெறும் திருவிழாக்களை கலை விழாக்களாக நடத்தி, நமக்கெல்லாம் இன்பமளிக்கப்பல பிரபுக்கள் பெருமுயற்சி எடுக்கின்றார்கள். பெருஞ்செலவில் புகழ்பெற்ற நாகசுரக்காரர்களுக்கும், வேறு பல பல கலைஞர்களுக்கும் ஒழுங்கு செய்வது சமூகத்துக்குச் செய்யும் மேலான நன்மையாகும். ஆகவே இதற்கான ஒழுங்குகள் செய்பவர்களுக்குச் சமூகம் நன்ற செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

பல பள்ளிக்கூடங்களிலும் கலைவிழாக்கள் அதிகம் நடைபெறுகின்றன. தேர்தல் கூட்டங்களுக்கும் மக்கள் அதிகம்வரவேண்டும் என்பதற்காக, கலை நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டு வருவதைப் பார்க்கின்றோம். இருபது வருடங்களுக்கு முன்னிருந்த நிலையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இங்கு கலைகளும், கலைஞர்களும் பெருகியுள்ளதையும், மக்களுக்குக்கலை ஆர்வம் அதிகரித்துள்ளதையும் காணலாம். இது மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கத்தக்கதாகும்.

தங்கள் அருமைக் குழந்தைகள் ஏதாவது ஒரு கலையிலே தேர்ச்சிபெற வேண்டுமென்று பெற்றோர்களில் பலரும் ஆவல்கொண்டு, தகுந்த கலையில் பயிற்சி அளிக்க அதிகமாக முற்படுவதைப்பார்க்கின்றோம். பல சினிமாச்சாலைகளுக்கும் மக்கள் அதிகமாகச் செல்லுவதற்குக்காரணம் அங்கு இசை, நடனம் முதலிய பல பல கலைவிருந்தும் கிடைக்குமென்பதால் தான்.

அருங்கலைகளின் விசேஷமென்னவெனில் கலைஞர்கள் தாங்கள் இன்பம் பெறுவதுடன், மற்றவர்களுக்கும் இன்பமளிப்பதுதான். பிறரை இன்புறுத்துவதிலேயே உண்மையான இன்பமுண்டு. தங்களிடம் நல்ல கலைச்செல்வமிருந்தும், அதைப் பிறருக்குப் பயன்படுத்த முடியாமல் இருப்பதைவிட கலைஞர்களுக்கு மனவேதனை அளிப்பது வேறு இருக்க முடியாது. காசு பணம் கூட அவர்களுக்குப் பெரிதல்ல. தங்களுடைய இசையை அதிகமானவர்கள் கேட்டு, இன்புற்றால் அதுவே அவர்களுக்கு மனத்திருப்தி அளிக்கும். ஒரு "பலே", "சபாஷ்" அல்லது கரகோஷம் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்தது போலாகும். இதனல் அவர்கள் மனம் குளிரும்.

சமூகத்தின் மதிப்பையும் இன்பத்தையும் வளர்க்கப் பெருங்காரணமாக இருப்பவர்கள் கலைஞர்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து ஓங்குவது, சமூகத்துக்குப் பல விதங்களிலும் நல்லது. அவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு ஆதரவு அளிக்கின்றோமோ அவ்வளவும் அவர்கள் உற்சாகத்தடன் வளர்ந்தோங்கவும், சமூகத்துக்கு இன்பம் பெருகவும் உதவிக்கொண்டவர்களாவோம்.

முன் காலத்தில் தமிழ்மன்னர்கள் கலைஞர்களை ஆதரித்தனர். அவர்களுக்கு மான்யம் முதலியவை வழங்கி, கவலையில்லாமல் அவர்கள் ஜீவிக்கவும், கலைகளிலேயே அவர்கள் பூரணகவனம் செலுத்தி அபிவிருத்தி செய்யவும் உதவினர். பட்டங்கள் அளித்தனர். பொன்னடை போர்த்தினர். பல பல பரிசுகள் வழங்கினர். இக்காலத்தில் தமிழ்மன்னர்களில்லை. ஜனநாயக முறையில் பொதுமக்கள் எல்லாருமே "இந்நாட்டு மன்னர்கள்"தான். ஆகவே பொதுமக்கள்தான் கூடிய ஆதரவை கலைஞர்களுக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

இந்திய அரசாங்கம் கலைஞர்களுக்குப் பல பல கௌரவங்களையும் ஆதரவையும் அளித்துப்போற்றுகின்றது இங்கு ஜனப் பிரதிநிதிகள் சபையிலுள்ள நமது பிரதிநிதிகள் இவ்விஷயத்தில் அதிக கவனமெடுத்து, சமூகத்தின் அரிய பொக்கிஷங்களான கலைஞர்களுக்குப் பலவிதங்களிலும் அரசாங்க ஆதரவு கிடைக்க கூடுமானதைச் செய்ய வேண்டும். ஆங்காங்கே இவ்விஷயமாக தங்களால் ஆன உதவியைச் செய்பவர்கள், சமூகத்துக்கு மட்டுமன்றி தங்களுக்குத் தாங்களே மேலானநன்மை செய்துகொண்டவர்களாவர்.

# பருளை விநாயகர் ஆலயம்

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாந் தன்மையினற்
கண்ணிற் பணியின் கனிந்து.

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது. இயற்கை எழில் நிறைந்த பசுமையான காட்சிகள் எப்போதும் காட்சியளிக்கும் மருதநிலப் பகுதிதான் பருளை என்று அழைக்கப்படும் ஊர் ஆகும். ஆறு குடும்பங்கள் இரண்டு ஆலயங்கள் அவற்றைச்சுற்றி வயல்கள், குளங்கள். தாமரைக் கேணி, தர்ப்பைத் தோட்டம், பூந்தோட்டம் புன்னை மரங்கள், நெல்லிமரம், சிவனும் பார்வதியும் சேர்ந்திருப்பதுபோல வெள்ளரசும் வேம்பும் சேர்ந்து இருப்பது, பார்த்த இடமெல்லாம் மயில்கூட்டங்கள். இதுதான் பருளை.

பருளை என்றால் மேடு என்பது பொருள் என்றும் சொல்கின்றார்கள். முருகன் மேட்டு நிலத்தில் வசிப்பான் என்பது ''குன்றுதோருடி

**இ. பிரேமகாந்தன்**

வரும் குமரவடிவேலன்'' என்ற பாட்டின் கருத்தினல் நாம் அறியலாம். இந்த மேட்டு நிலத்தின் அரசன் விநாயகன். சேனதிபதி சுப்பிரமணியன். சுழிபுரத்தை அரசுசெய்யும் இவர்களின் கருணையை யாராலும் அளவிடமுடியாதென்பதுமக்கள் அபிப்பிராயம்.

இரண்டு ஆலயங்களில் ஒன்று விநாயகர் ஆலயம். மற்றது சிவசுப்பிரமணிய சுவாமிகோவில். இரண்டு ஆலயங்களும் மிகப்பழமை வாய்ந்தவை.

பருளை விநாயகராலயம் தமிழரசர் அரசுசெய்த காலத்தில் கட்டப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள். பின்னர் போர்த்துக்கீசர் அரசுசெய்தகாலத்தில், அவர்கள் சைவசமயக் கோவில்களை இடித்துக் கொண்டு வரும்போது இந்தப் புண்ணிய ஸ்தலமான பருளைக்கும் வந்தார்கள். விநாயகராலயத்தையும் இடிக்கத்தொடங்கினர். அப்போது ஒரு காகம் பறந்து பறந்து இடிப்பித்தமேலதிகாரியினுடைய கண்களைக் கொத்தி கோவிலை இடிக்க

(10-ம் பக்கம் பார்க்க)

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[ விசுவாவசு ஆனிமீ 27ஞாயிறு (11-7-65)முதல் 2 சனி (17-7-65) வரையுள்ள உங்கள்பலன்கள் ]

### மேட இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழில்களால் பொருள்வரவு, தொழில் வருவாய், அதிகரிப்பு காரணமாக மனமகிழ்ச்சி, குடும்ப சந்தோஷம் ஆதியனவுடன் ஆயுத சம்பந்தமான பயம், மனச்சஞ்சலம், வாக்குக் கலகம், ஆதியனவும் காணப்படும். கமத்தொழில்நற்பலன், உத்தியோகம்மத்திமபளன் பணவரவு. கல்வித்துறையினருக்கு நற்பலன்கள் கிட்டல், பெண்களுக்கு சமாதான வாழ்வு, குடும்ப சுகம். ஆதியனகாணப்படுகின்றன.

### இடப இராசி

இவ்விராசியாளருக்குஇவ் வாரத்தில் செய்தொழில்களால்மனம்மடிவு, பொருள் வரவு குறைதல், கடன் பயம், அரசாங்கபயம், சத்துருக்களால் கஷ்டங்கள் விளைதல், மனச்சஞ்சலம் காணப்படும். இவற்றுடன் கமத்தொழில் மத்திமபலிதம், கல்வித்துறை பரீட்சைகள் வெற்றி, பொறுப்புகள் அதிகரித்தல், வர்த்தகத்துறையில் சிறப்பு, பெண்களுக்கு புத்திரரால்கஷ்ட , இனபந்துக்கள் சேர்க்கை ஆதியனகாணப்படுகின்றன.

### மிதுன இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கடன்படல்,பயனற்ற பிரயாசங்கள், ஏமாற்றம், உடலில் இரத்த சம்பந்தமான ரோகத்தினல் கஷ்டங்கள், குடலில் உணவுக் கரைச்சல் ஏற்படல், இனபந்துக்களுடன் பகமை விளைதல், வீண் அவமானச்சொற்கேட்டல், பிற இட பிரயானங்கள், செலவு அதிகரித்தல், வஞ்சகத்தால் துன்பங்கள் விளைதல், கல்வித்தடை, கமத்தொழில் நட்டம், கால்நடைக்கேடு, உத்தியோகத்துறைச்செலவுகள்- சஞ்சலங்கள் அதிகரித்தல், வர்த்தகத்துறை பொருள் அதிகம்கொள்ளல்-விற்றல், கடன் பயம்,பெண்களுக்கு குடுப்பக்கஷ்டம், சமூகத்தில் மதிப்புக் குறைதல், ஆண்களால் ஏமாற்றம் ஆதியன காணப்பட இடமுண்டு

### கடக இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழில் மத்திமபலிதம், தேகத்தில் ஆரோக்கியக்குறைவு, வயிற்றில்-மார்பில் ரோகங்கள் காணல், கஷ்டமான பிரயாணங்களை அடிக்கடி செய்வதால் பணச்செலவு ஏற்படல், கமத்தொழில் நன்மை, தாயாதிகள் உதவி, கால்நடைஇலாபம், கல்விப்பகுதி மத்திமபலிதம், உத்தியோகத்துறை அதிகார விருத்தி, மேலோர் உதவி, பணியாளர் துணை, வர்த்தகம் மத்திமபலிதம், மூலதனமுடக்கம் கஷ்டம் தருதல், பெண்களுக்கு வீண் பழிகேட்டல், பொருள் முடை, ஏமாற்றம் ஆதியன காணப்படுகின்றன.

### சிங்க இராசி

இவ்விராசியாளருக்குசெய் தொழில் சுபசித்திதருதல், கொடுத்த பொருள்கள் கிடைப்பதில் தாமதம், அதிக பிரயாசம், சயன-போசனசுகம், செலவுகள் அதிகரித்தல், இடப்பிரிவு, ஆயுதரோகபயம், சத்துருக்களால் கஷ்டங்கள் ஏற்படல். இனபந்துக்கள் பகைத்தல், கமத்தொழில் நலன்தருதல், வண்டிவாகன சுகம், வர்த்தகத்துறை பொருட் கஷ்டம், மந்த நிலைமை, கொடுக்கல் வாங்கல் இடர்கள் ஏற்படல், உத்தியோகத்துறையில் அதிகாரம், வாக்குக்கலகம், பெண்களுக்கு செய்காரிய சித்தி, வீண் டாம்பீகச் செலவுகள், சமூகத்தில் உல்லாச பிரயாணங்கள் ஏற்படல், ஆண்களால் ஏமாற்றப்படல் ஆதியன காணப்படுகின்றன.

### கன்னி இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேக நலம் பாதிக்கப்படல், இரத்த சம்பந்தமான ரோகங்காணல், சத்துருக்களால் கஷ்டம், இனபந்துக்கள் குழப்பம், வண்டிவாகன சுகம், வாக்கு வசிகரம், இழந்த பொருள்கள் சேரல், தொழில் நற்பலன் தருதல், தனதானிய இலாபம், கமத்தொழில் சித்தி பரீட்சைகளில் நிறைவு, பொருள் உதவி கிடைத்தல், புத்தித்திறமை திறமைபிரகாசித்தல், வர்த்தகத் துறையில் புதிய முயற்சிகளில் ஈடுபாடு, அதிக செலவு, உத்தியோகத்துறையில் பொறுப்புக்கள் அதிகரித்தல்! பிரயாணத்திற்கேற்ப பயன் கிட்டாமை, பெண்களுக்கு புத்திரமித்திர மகிழ்ச்சி! பணவரவு, வாக்கு வசீகரம் சமூகமதிப்பு ஆகியன காணப்பட இடமுண்டாம்.

### துலா இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் இருவித பலன்களும் கலந்து நடப்பினும் கஷ்ட பலன்கள் கூடுதலாக இருக்கும். சயன போசன சுகம், செய்காரிய அனுகூலம், பணியாளர் அதிகாரிகள் உதவி, குடும்பத்தில் சிறப்பு, வாகனநன்மை, சத்துருக்களுக்கு அழிவு ஆகியனநற்பலன்களாகக்காணப்படும் வேளையில், கஷ்ட பிரயாணங்கள், உடலில் உட்டணம்,பித்தம், வாதம்சம்பந்தமான ரோகங்கள் காணப்படல், குடும்பத்தில் புதிய பிரச்னைகள் தோன்றல், செலவுகள் அதிகரித்தல் கமம்— வர்த்தகம்— உத்தியோகம் ஆகியவற்றில் பிரயாசத்துக்கேற்ற பலன் கிட்டல், பெண்களுக்கு நன்மை கிடைத்தல், சுகபோகப் பொருள் சேர்க்கை, பணவரவு, உடலில் உட்டண ரோகம் ஆதியன காணப்பட இடமுண்டு.

### விருச்சிக இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்காரியக் கேடு, தொழிலில் சமமான வருவாய் கிடைத்தல், வீண் பழிகேட்டல், விதண்டாவாதங்களால் குடும்பத்தில் சச்சரவு, கொடுக்கல் வாங்கலிற் பிரச்சினைகள், பணமுடை,சத்துருக்கள்வெற்றி, இடமாற்றம், நினைத்தவை தடைப்படல், குடும்பத்திலும் இனபந்துக்களிலும் கஷ்டங்கள் ஏற்படல் ஆகியவற்றுடன் பூமிப் பலிதம், தனதானிய விருத்தி, சயன போசனசும் ஆகியனவும் கல்வித்துறை—உத்தியோகத் துறை — வர்த்தகத் துறை மத்திம பலன்களும் பெண்களுக்கு சுகபலன்களும்மாதுரு விருதிருவழி உதவிகள் கிடைத்தலும் காணப்படுகின்றன,

### தனு இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலக் குறைவு, வயிற்றில் ரோக கண்டம், உட்டண அதிகரிப்பால் சங்கடங்கள்விளைதல், செய்காரியக்கேடு, பணவரவு குன்றல், அதிகபிரயாசமும் அதற்கேற்ற பலன் கிட்டாமையும், சத்துருக்களால் கஷ்டங்கள், அக்கினி—ஆயுதபயம், குடும்பத்தில் ரோககவலைகள், சமநற்பலிதம், தனதானிய இலாபம், கல்விவிருத்தி, வர்த்தகத் துறை, பொருள்வரவு, தொழில்விருத்தி, உத்தியோகத் துறை கஷ்டங்கள், அதிகாரிகள் வெறுப்பு, பொருள் முடை, பெண்களுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

# உலகமேடை

டி.எம்.எம்

## கருதினல் விஜயம்

ஆர்ச் பிஷப் கூரே கருதினல் பட்டம் பெற்றபின் யாழ்ப்பாணத்துக்கு சமீபத்தில் விஜயம்செய்தார். சகல மதங்களையும் சமமாக மதிக்கும் திவ்யஜீவனக் குருவின் விஜயத்தைத் தொடர்ந்து கருதினலின்வருகைபொருத்தமாய் அமைந்தது. சில மாதங்களுக்குமுன் கொழும்புப் பிரமுகர் ஒருவர் இங்கு வந்து சகல மதத்தினரையும் ஒரேமேடையில் ஒன்று கூட்டி சர்வசமய ஒற்றுமை பற்றிப் பிரசாரம்செய்தார். கருதினலின் விஜயம் இனி பௌத்த, இஸ்லாமிய சமயத் தலைவர்களையும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்ய ஊக்கமளிக்குமென எதிர்பார்ப்போமாக.

இலங்கையில்கத்தோலிக்க திருச்சபையில் மொழிப் பிரச்னை கிடையாது என கருதினல் தெளிவுபடுத்தினர். சிங்களமக்கள் தமிழையும், தமிழ்மக்கள் சிங்களத்தையும் படிக்கவேண்டுமென்றும், இவ்விஷயத்தில் கட்டாயம் எதுவுமின்றி தாங்களாகவே அவர்கள் கற்பதன் மூலம் மேலான சமூக ஒற்றுமைக்கு வழி ஏற்படும் என்றும் அவர் கூறிய யோசனையை நியாய மனதுபடைத்த எவரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

★

## ஹேமன் மறைவு

சென்றவாரம் சர்வதேச விளையாட்டுத்துறையில் இரு முக்கிய சம்பவங்கள் ஏற்பட்டன. இந்த நூற்ருண்டின் மிகப்பெரும் கிரிக்கெட் வீரர்களில் ஒருவராய் விளங்கிய வால்டர்ஹேமன் காலமானது ஒன்று. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராய் எமர்ஸன் 2-வது முறையாகவும் விம்பிள்டன் கிரீடத்தை சுவிகரித்தது மற்ருென்று.

வால்டர் ஹேமன் பிரிட்டனைச் சேர்ந்தவர். பிரிட்டிஷ் டெஸ்ட் கோஷ்டியின் காப்டனுகப் பலமுறை பணியாற்றி அபாரசாதனைகளைப் புரிந்தவர். 1947-ம் ஆண்டு இந்த விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்று தென்னுபிரிக்கா சென்று அங்கேயே ஸ்திரமாக வசிக்க ஆரம்பித்தார் சென்றவாரம் டர்பனில் காலமானர்.

கிரிக்கெட் விளையாட்டில் ஹேமனின் சாதனைகள் பிரமிக்கத்தக்கவை. அவர் எடுத்த மொத்த ரன்கள் 50301. எல்லாமாக 999 இன்னிங்ஸில்விளையாடியிருக்கிருர். 103 தடவை அவுட் ஆகாமல் இருந்திருக்கிருர். 1932-ல் 336ரன்கள் எடுத்து அவுட் ஆகாமல் இருந்தார். அவர் விளையாடிய டெஸ்டுகள் சுமார் 160. அவர் 55 டெஸ்டுகளில் எடுத்தரன்கள் 7239.

கிரிக்கெட் உலகில் அவர் ஒரு பீஷ்மன்; எனவே விளையாட்டுத் துறையில் அவரது மரணம் ஒரு பேரிழப்பு.

★

## எமர்ஸன் வெற்றி

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராய் எமர்ஸன் இரண்டாவது தடவையாகவும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் உலகசாம்பியனுனது மற்ருெர் முக்கிய நிகழ்ச்சி. அவருக்கு வயது 28.

இதர விம்பிள்டன் வீரர்களுக்கும் எமர்ஸனுக்குமிடையே ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. எமர்ஸன் ஓட்டத்திலும், பாய்தலிலும் கூட ஒரு சிறந்தவிளையாட்டு வீரர் என்பதே அந்த வித்தியாசம். அவருக்கு 14 வயதாய் இருக்கும்போது 100 யார் தூரத்தை 10. 6வினுடிகளில் ஓடிமுடித்தார். தூரப்பாய்தலில் 21 அடி 6 அங்குலத்தை சாதித்தவர். 1953-ம் ஆண்டு, தனது 16-வது வயதில்முதன்முதல் டேவிஸ்கப் போட்டியில் பிரவேசித்தார் எமர்ஸன்.

விம்பிள்டன் விளையாட்டுப் போட்டியில் ஒற்றையர் ஆட்டங்களும், இரட்டையர் ஆட்டங்களும் உண்டு. இவை ஆண்களுக்கும், பெண்களுக்கும் பிரத்தியேகமாக நடக்கும். இருந்தாலும்கூட ஆண்கள் ஒற்றையர் ஆட்ட சாம்பியனுக்குத்தான் மதிப்பு அதிகம்.

விம்பிள்டனில் நம்மவர்களுக்கு ஓரளவு சிரத்தை ஏற்பட்டதற்கான சில காரணங்களில், ராமனுதன் கிருஷ்ணன் கடந்த சில ஆண்டுகளாக அங்கு விளையாடி வருவதும் ஒன்று என ஊகிப்பதில் தவறு இருக்கமுடியாது.

கிருஷ்ணன் சென்னையைச் சேர்ந்தவர். 16 வயதில் அகில இந்திய சாம்பியனுனவர். உலகின்சிறந்த 6டென்னிஸ் விளையாட்டுக்காரர்களில் அவரும் ஒருவராய் கணிக்கப்படுகிருர். விம்பிள்டன் ஒற்றையர்ஆட்ட சாம்பியனுகவர அவர் கடந்த பல ஆண்டுகளாக எவ்வளவோ முயற்சி செய்தும் அதிர்ஷ்டம் கிட்டவில்லை. செமிபைனல்ஸிலேயே தோற்றுவிடுகிருர். என்ருவது ஒருநாள் எமர்ஸனின் ஸ்தானத்திற்கு அவரால்வர முடியுமா என்பது அவரது அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

★

## தாஜ்மகால்

உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்ருன தாஜ்மகாலையும், ஆக்ராகோட்டையையும் புதுப்பிக்க டில்லி அரசாங்கம் 3 கோடி ரூபாய் செலவிடப் போவதாக சென்றவாரம் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு வரும் உல்லாச யாத்ரீகர்கள் மனிதனுல் சிருஷ்டிக்கப்பட்ட இந்தக் காதல் கோபுரத்தைத் தரிசிக்காமல் செல்வதில்லை. உல்லாசப் பிரயாணிகள் மட்டுமின்றி அங்கு வரும் மன்னர்களும், ஜனதிபதிகளும், பிரதம மந்திரிகளும், இதரமுக்கியஸ்தர்களும்கூட தாஜ்மகாலின் அழகில் மயங்கி அதை அற்புதமாக வருணித்துப் போயிருக்கிருர்கள்.

இந்திய சரித்திரத்தில் மொகலாயர்காலம் குறிப்பிடத்தக்க சம்பவங்களைக் கொண்டது. இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், சிரிப்பும் கண்ணீரும் பொருந்திய பல சம்பவங்களை அது உள்ளடக்கியது.

கஜினி முகம்மது பாரத நாட்டின்மீது 17 தடவைகள் படையெடுத்தான். ஹிந்துக்களின் ஆலயங்களை இடித்து விழுத்தி விக்கிரகங்களை மாசுபடுத்தி அங்கிருந்த இரத்தினங்களை அடுத்தடுத்துக் கொள்ளையடித்துச்சென்ருன். அதே சமயம் அக்பர் பாதுஷாபோன்ற சிறந்த சக்கரவர்த்திகளும் இருந்தார்கள். இந்த மொகலாயர் காலத்தின் கடைசிப் பரம்பரையில்தான் தாஜ்மஹால் எழுப்பப்பட்டது.

ஷாஜஹான் சக்கரவர்த்தியின் பட்டமகிஷி மும்தாஜ் மஹால். அவள்மீது தீராக் காதல் கொண்டிருந்தான் மன்னன். ஷாஜஹானின் உயிராக விளங்கிய மும்தாஜ் மஹால் இறந்தாள். மன்னன் புழுவாய்த்துடித்தான். அவளுக்கு அவன் செய்த ஒரே பிரதிஉபகாரம் அவளது கல்லறையை உலகம் போற்றும் அற்புத அழகுக் கோபுரமாக சிருஷ்டித்ததுதான். மனைவியின் பெயரிலுள்ள முதல் இரு எழுத்துக்களை நீக்கி அதற்கு தாஜ்மஹால்எனப் பெயரிட்டான்.

இந்தக் கட்டிடத்தை பல்லாயிரம் சிற்பிகள், பல ஆண்டுகள் உழைத்து உருவாக்கினர்கள். ஒவ்வொரு வேலைக்கும் அந்தந்த வேலையில் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் பல நாடுகளிலுமிருந்து வரவழைக்கப்பட்டார்கள். அந்தக்காலத்திலேயே இதை சிருஷ்டிக்க சுமார் 7 கோடி ரூபாய்பிடித்ததாம்.

காதலின்சின்னமான இந்த தாஜ்மஹால் இன்னும் இளமை குன்ருப் புன்னகையுடன் வந்தவர்களை வாவா என்று அழைக்கிறது. பூரண சந்திரனின் பொலிவிலே ஒருசொப்பனஉலகாய்விளங்குகிறது. கூடவே மொகலாயர் காலமும், அந்தப்புரங்களும், ஆடம்பரமும், அழகும், கற்பனையைக் காட்டாற்றுவெள்ளமாகப் பிரவகிக்கச்செய்கின்றன.

மனிதன் சிருஷ்டித்த ஏழு அதிசயங்களில் இரண்டு, காதல் சின்னங்கள். ஒன்று தாஜ்மஹால். மற்ருென்று தொங்கும் பூந்தோட்டம்.

பாபிலோனியாவில் இறுமாப்புடன் ஆண்டுவந்த நேபுகாத்நேச்சார் இத்தொங்கும் பூந்தோட்டத்தை உண்டாக்கினுன். தனது காதலியை மகிழ்விக்கும் பொருட்டு உலகுக்கு இந்த அதிசயத்தை அவன் வழங்கினுன். சக்கரவர்த்திகளான ஷாஜஹானும், நேச்சாரும், அவர்களின் ராணிகளும் காலத்துடன் மறைந்துவிட்டார்கள். ஆனல் அவர்கள்படைத்தஒப்பற்றகாதல் சின்னங்கள் உலகில் இன்னும் மின்னி வருகின்றன.

★

## வேற்றுமையில் ஒற்றுமை

கட்ச்-ரன் பகுதியில் இந்தியா, பாகிஸ்தான் இரு பகுதி துருப்புகளும் வாபசாகிவிட்டன. மீண்டும் மாமூல்படி பொலிசார் ரோந்துப் பொறுப்பை ஏற்றிருக்கிருர்கள். அங்கு இனி சண்டைக்கு இடமில்லை. ஆனல் பிரச்னை இத்துடன் முடிந்துவிடவில்லை. இருதேச ஒப்பந்தத்தின் முதலாவது அம்சம்தான் இப்போது பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறது. அதாவது இரு ராணுவங்களும் வாபஸாகியிருக்கின்றன. இதைத் தொடர்ந்து இன்னும் பல சடங்குகள் இருக்கின்றன. "இறுதிச் சாஸனம்" எழுதிமுடிய மேலும் 3 மாதங்களாவது பிடிக்கும். ஒருவேளை இந்த ஆண்டு இறுதி வரை கூட அது நீடிக்கக் கூடும்.

எதுவாயினும் இரு தேசங்களுக்கிடையே வேற்றுமையிலும் ஒற்றுமை காணப்பட்டிருப்பது முக்கிய விஷயம். இதில் ஜனித்த குழந்தைதான் கட்ச் ஒப்பந்தம்.


பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் குழந்தைக்கு "ஞானத்தந்தை"யாக இருந்து ஆசீர்வதித்தார்.

கட்ச் விஷயத்தில் வேறு சில அம்சங்களிலும் வேற்றுமையில் ஒற்றுமை காணப்பட்டது.

அதாவது கட்ச்பகுதியில் எதிரும் புதிருமாக சண்டையிட்ட இந்திய-பாகிஸ்தான் தளபதிகள் இருவரும் இராணுவ கல்லூரித்தோழர்கள் பிரிக்கப்படாத இந்திய ராணுவத்தில் ஒன்ருகச் செயலாற்றியவர்கள். பிரிக்கப்பட்ட உபகண்டத்தில் பிரிந்து சென்ருர்கள். கட்ச்பகுதியில் பிரிந்துநின்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டார்கள். இப்போது ஒற்றுமையுடன் தங்கள் துருப்புகளை தத்தம் நாடுகளின் உள்ளேகொண்டுசென்றுவிட்டார்கள். அது மட்டுமா?

கட்ச் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்திய-பாகிஸ்தான் அதிகாரிகள் இருவரும் ஒன்றைவிட்ட சகோதரர்கள். பெயராலும் ஒன்றுபட்டவர்கள். இருவரும் முஸ்லிம்கள். சகோதரர்கள். இருவர் பெயரும் ஹுசெயின். உபகண்டம் பிரிக்கப்பட்டபோது பிரிந்தார்கள். ஒப்பந்தத்தின் போது ஒன்றுகூடினர்கள். வேற்றுமையிலும் ஒற்றுமை.

இதற்குள்ளே ஒரு தத்துவம் பொதிந்துகிடக்கிறது. தனிப்பட்டவர்கள் மட்டுமின்றி இருபகுதி தலைவர்களும், மக்களும் இவ்வாறு ஒன்றுபட்டால் எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கும்.



கொழும்பு அதிமேற்றிராணியார் வந்தனைக்குரிய கருதினல் கூ்ற அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபொழுது, யாழ்ப்பாண மேயர் அன்னுரை வரவேற்றகாட்சி.

★

## டெய்லர் ராஜினமா

தென்வியட்னுமில் அமெரிக்க ஸ்தானிகர் பதவியிலிருந்து ஜெனரல்மாக்ஸ்வெல் டெய்லர் ஏன் ராஜினமா செய்தார்? அவர் விடுத்த அறிக்கையை இரண்டாகப் பிரித்துத்தான் நாம் பதில் கூறவேண்டியிருக்கிறது.

ஒரு வருடம் மட்டுமே பதவியிலிருக்க முடியும் என்ற நிபந்தனையின்பேரில் தான் சைகோனில் கடமைப் பொறுப்பை ஏற்றதாயும், இந்தத்தவணை முடிந்துவிட்டது என்றும் அவர் கூறுகிருர்,

நிருபர்களுக்களித்த பேட்டியில் வெறும் ராணுவநடவடிக்கைமூலம் அமெரிக்கா, வியட்னும் யுத்தத்தை வெல்லமுடியாது என டெய்லர் கூறினுர். அரசியல், பொருளாதாரம், மனோதத்துவம், ராணுவபலம் அனைத்தையும் ஒன்று கூட்டி வியட்னுமில் பயன்படுத்தினல் மட்டுமே அது சாத்தியம் எனவும் அவர் கூறினர்.

தற்போது அமெரிக்க அரசாங்கம்வியட்னுமில்ராணுவ நடவடிக்கையை மட்டுமே பிரதானமாகப்பயன்படுத்துகிறது என அவர் கருதியிருக்கலாம். இதனுல் ஜனதிபதியுடன் அவர் அபிப்பிராயபேதம் கொண்டிருக்கலாம். இந்த அபிப்பிராய பேதம் காரணமாக அவர் ஏன் ராஜினமா செய்திருக்கக் கூடாது என்ற சந்தேகம் எழுகிறது.

ஒரு பிரபல ஜெனரல், அமெரிக்காவின் முக்கிய ஒரு நோக்கத்திற்காக இன்னும் சிலகாலம் ஏன் பதவியில் நீடிக்கக்கூடாது? ராணுவ ரீதியில் அமெரிக்கா வியட்னுமில் தோல்விகண்டுவருகிறது என அவர் கருதுகிருரா என்ற சந்தேகமும் டெய்லரின் அறிக்கையில் தொனிக்கிறது.

வியட்னுமில் ராணுவ வெற்றியைசாத்தியமாக்கும் பொருட்டேடெய்லர் ஜனதிபதியின் விசேஷ தூதராக அனுப்பப்பட்டார். ஆனல் சமீப காலத்தில் பல ராணுவத் தோல்விகளை அவர் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அமெரிக்கா ஒரு புறம் சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டு, அதே சமயம். வியட்னுமுக்குமேலும் துருப்புக்களை அனுப்பிவருகிறது. இப்போது 60,000 க்குமேற்பட்ட அமெரிக்கர்கள் அங்கு இருக்கிருர்கள், வருகிற கோடைக் காலத்திற்குமுன் இது 1 லட்சத்தைத்தாண்டிவிடும் எனக்கூறப்படுகிறது.

ஒரு பெரிய ஜெனரலுக்குப் பதில் ஒரு பெரிய ராஜதந்திரி (கெபோட்லாட்ஜ்) இப்போது மீண்டும் அமெரிக்கப் பிரதிநிதியாகவருகிருர். இந்தச் சூழ்நிலையில் தென் வியட்னுமின் எதிர்காலம் என்ன என்பது ஒரு நாள் வெளிப்படத்தான் போகிறது.

### என்ன வேலை?

கண்ணன்: அடே ராமு! கல்யாணமானவுடன் உன் மாமனர் உனக்கு வேலை எடுத்துத் தருவதாகச் சொன்னரே! ஏதாவது செய்தாரா?

ராமு: உம்...செய்திருக்கிருர்

கண்ணன்: என்ன வேலை?

ராமு: அவரது இரண்டாவது பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகிறவேலை!

# சிறுவர் பூங்கா

## அழகுக்கமலம்

— செ. மகேந்திரன் —

சேற்றில் எழுந்த
மலரே நீ
சிரிக்கும் கதிரோன்
துணையே நீ
போற்றும் அன்புக்
கிணையே நீ
பொங்கும் அழகுக்
கமலம் நீ

எழிலாய் மலர்ந்த
மலரே நீ
என்றும் பெருமை
கொள்ளாய் நீ
அழியாப் புகழுக்
குரியாய் நீ
அமைதிக் குரியாய்
மலரே நீ

கதிரோன் மறைய
மடிவாய் நீ
கவலைக் கடலுள்
அமிழ்வாய் நீ
உதிர்வாய் இதுவா
வாழ்க்கை? நீ
உலகுக் கொளியாய்
மலர்வாயே!

## மழைநாள்

— துரை கணேசன் —

காருக்குள் ஓடுது
பாரக்கா
கலைந்து கூடுது
பாரக்கா
இடியின் ஒலியைக்
கேளக்கா
இருண்டு சூழுது
பாரக்கா!

வாரிக் கொட்டுது
மழையக்கா
வள்ளம் கவிழுது
பாரக்கா
கூவி வீசுது காற்றக்கா
குளிர்ந்து விறைக்குது
ஏனக்கா!

அகண்ட கடலினைப்
பாரக்கா
அலைகள் உறுமுது
கேளக்கா
பருந்து ஒன்று
மழையிடையே
பறந்து வருகுது
பாரக்கா

அறிஞர்கள் வரிசை—1

## பேரறிஞர் பிளேட்டோ

— பரணிகாந்தன் —

ஞானமேதை சாக்ரட்டீஸின் மாணுக்கர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தவர் பேரறிஞர் பிளேட்டோ. இன்று நாம்மேதை சாக்ரட்டீஸைப் போற்றிப் புகழ்கிறேம்என்றுல்-அதற்கு அடிப்படைக்காரணமே பிளேட்டோதான்!

அரசியல் விரோதிகளாலே விஷங்கொடுத்துக் கொல்லப்பட்ட அந்த விவேகியின் தத்துவார்த்தங்களை எழுத்திலே வடித்தவர் பேரறிஞர் பிளேட்டோ!

இவர் அரிஸ்ட்டாட்டிலை அறிஞுக்கிய குருநாதருங்கூட. ஏதென்ஸிலே பிறந்து வளர்ந்த பிளேட்டோ படிப்பினுலே பெற்ற அறிவைவிட, அனுபவத்தால் பெற்ற அறிவு தான் மிகுதியாகும். பெருங்கவிஞர் ஹோமர் எழுதிய இலியத்தும், ஒடிஸ்ஸோவும்தான் இவரதுபெருமதிப்பைப் பெற்றுவிட்ட காவியங்களாகும். பிளேட்டோவிடம் எழுத்து வன்மையும் பேச்சுவன்மையும் மட்டும் இருக்கவில்லை. பொலப்பொனேசியா யுத்தத்திலே கலந்துகொண்டு இவர் காட்டிய வாள் வலிமையும் தோள் வலிமையும் பிற்காலத்தில் ஒரு சிறந்த படைத் தளபதியாகப் பிளேட்டோ வரக்கூடும் எனப் பலரை எண்ணச் செய்தன.

ஆனுல்—

அப்படி எண்ணியோர் ஏமாந்தவராயினர்!

சிஸிலித் தீவிலிருந்த ஸைரக்யூஸை ஆண்ட டையோனிஸியஸ் என்பான் தனக்கு நல்லறிவு சொல்ல வந்த பிளேட்டோவை ஸ்பார்ட்டா தேசத்து அடிமை வியாபாரி ஒருவனிடம் ஒப்படைத்து, விற்றுவிடும்படிகட்டளையிட்டான்.

பேச்சுத்திறத்தாலே அவனிடமிருந்து தப்பி, மீண்டும் ஏதென்ஸ்வந்துசேர்ந்த பிளேட்டோ, 'அகாடமி' என்ற பெயரிலே கல்விக் கழகமொன்றை நிறுவினுர், இக்கழகத்தில் புத்தகமின்றி வாய்ச் சொல்லாலேயே போதிக்கப்பட்டன.

ஐரோப்பாவிலேயே முதல் முதல் துவக்கப்பட்ட சர்வகலாசாலை இதுவாகத்தான் இருக்கக்கூடுமென்றனர், ஆராய்ச்சியாளர். அரிஸ்ட்டாட்டில் கூட இந்தக்கல்விக்கழகத்தில் படித்தவர்தான்.

ஒருமுறை கிரீஸில் நடந்த ஒலிம்பியா விழாவுக்குச் சென்றிருந்தார் பிளேட்டோ. அங்கே வந்திருந்த சிலர் ஏதென்ஸிலிருந்த 'அகாடமி'யைப்பற்றி கேள்விப்பட்டிருந்ததோடு, அதைச் சென்று காணவும் ஆசைப்பட்டனர். பிளேட்டோவே அவர்களை அழைத்து வந்து, தனது கல்விக் கழகத்தின் அருமை பெருமைகளை விளக்கி, கழகத்தை காணச் செய்தார். வந்திருந்தவர்கள், அழுக்கு உடையும் எளிய உருவமும் அமைந்த பிளேட்டோவை யாரோ என்று எண்ணிக் கொண்டு, 'இக்கழகத்தை நிறுவியவர் யாரோ?' என்றனர். 'நான்தான்' நிறுவினேன் என்று பிளேட்டோ சொன்னதும் அவர்கள் அடைந்த வியப்பைச்சொல்லமுடியாது.

பிளேட்டோவின் அரிய நூல்கள்—அரசியல், சட்டம் என்ற இரண்டுந்தான். இந்த இரண்டையும் இரு கண்களாகப் போற்றினர் ஏதென்ஸ் மக்கள்.

பிளேட்டோ இன்றில்லை!

ஆனுல்—

''மெய்யறிவு கொண்டோர் அடக்கமாயிருக்கின்றனர் என்றுலும், அவர்கள் அஞ்சாமையுடையவர்கள்!''

''பிறருக்கு நீ செய்யும் பெரிய தொண்டு - உன்னை நீ பாதுகாத்துக் கொள்வது தான்;''

என்பன போன்ற பிளேட்டோவின் தத்துவார்த்தக் கருத்துக்கள், உலகமுள்ள வரையிலே நிலைத்திருக்குமல்லவா?

பிளேட்டோ சாக்ரட்டீஸிடமிருந்து தான்பெற்ற நல்ல பல கொள்கைகளை அரிஸ்டாட்டிலுக்கு மட்டுமோ அல்லது ஏதென்ஸ் மக்களுக்கு மட்டுமோ உரிமையாக்கிவிட்டுச் செல்லவில்லை. அந்தப் பேரறிஞரின் அறிவுரைகள்உலகிற்கே கிடைத்துவிட்ட ஓர் அரிய புதையல்! இதனுலேதான் அவர்உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உறைபவரானுர்!

பிளேட்டோவின் புகழ் இந்தப் பேருலகம் உள்ள வரை நிச்சயம் வாழும்!

தந்தை: டேய் பாலு புத்தகத்தை எடுத்துவைத்துப்படியேன். சோதனை நெருங்கிவிட்டது.

மகன் பாலு: அப்பா, இப்போ படிக்கிற'மூட்' எனக்கு வரவில்லை.

### வியாபாரம்!

''ஏது புதுக் கடிகாரம் கட்டியிருக்கிறுற்போலிருக்கிறதே!''

''ஆமாம்!''

''என்ன விலைக்கு வாங்கினுய்?''

''விலை தெரியவில்லை. நான் அதை எடுத்து வந்த சமயத்தில் கடையில் யாருமில்லை.''

## மேற்கு ஜெர்மனி மாணவர் பிரச்னை

கோடை விடுமுறை முடிந்து கல்லூரிகளும் பள்ளிகளும் திறந்ததும் பிள்ளைகளுக்கு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் வாங்குவதற்கு நாம் படாதபாடு படுகிறேம். ஆனுல், மேற்கு ஜெர்மனியில் கல்வி ஆண்டு தொடங்கியது மாணவர்களுக்குப் பெருந்தலைவலியைக் கொடுப்பது கல்லூரிகளில் இடம் பிடிப்பது அல்ல. தங்குவதற்கு வசதியான அறையைத் தேடுவதுதான் அவர்களுக்குப்பெரும் பாடாக இருக்கிறது. மேற்கு ஜெர்மனி பான் நகரில் மாணவர்களுக்குஇட நெருக்கடியைப் போக்குவதற்குக் குறைந்தது 4000 அறைகள் நியாயமானவாடகையில் தேவைப்படுகின்றன. இத்தேவை இன்னும் பூர்த்தி செய்யப்படாமலே இருந்துவருகிறது. இந்நிலையில் மாணவர்களுக்காக ஒருவர் ஒரு தனி விடுதியே கட்டுகிறுர் என்றுல் அதை வரவேற்காத மாணவர் யாரும்இருக்கமாட்டார்கள். மாணவர்களின் குறையைப் போக்க முன்வந்திருக்கிறுர் பீட்டர் ரெய்ஷார்ட்.

300 மாணவருக்கு விடுதி வசதி அளிக்கும் வகையில் 12 அடுக்கு மாளிகை ஒன்றைக் கட்ட ஆரம்பித்திருக்கும் இவர் முன்பு ஒருசமயம் ஓட்டலில்' பாத்திரம்கழுவும் தொழிலாளியாக வேலை பார்த்தவர். இன்று ஜெர்மனியிலுள்ள மிகப்பெரிய தொழிலதிபர்களில் ஒருவராகத் திகழ்கிறுர்.

## ஆசுப்பத்திரி அநுபவங்கள்

— பொ. சண்முகநாதன் —

### இல்லாத வருத்தம் இல்லாத கிழவன்

மருந்துக்காக ஆசுப்பத்திரிக்குச் சென்றபொழுது எனக்கு முன் ஒரு கிழவன் டாக்டரிடம் தனது நோய் பற்றி அளந்து கொண்டிருந்தான்.

''கைகால் எல்லாம் ஒரே குத்துளைவாய் இருக்குதய்யா. தலையைச் சுற்றுது. அடிக்கடி மயக்கம் வருகுது. சாப்பாட்டிலை மனம் இல்லை. வயித்தைப் புரட்டுது. அப்படியில்லையென்று சாப்பிட்டால் சத்தி எடுக்குது. காது அடைக்குது. கண் கூச்சமாய் இருக்கு. பொழுதுபட்டால்இருமல் தொடங்கி விடும் 'கம்மு கம்மு' என்று இருமி இருமி தொண்டை கட்டிப்போச்சுது. மூச்சுவிடுகிறது மெத்தக் கயிட்டமாயிருக்கு''—

கிழவன் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனுன். பாவம் இந்தக் கிழவனுக்கு ஏன்தான் கடவுள் உலகத்திலுள்ள அத்தனை நோய்களையும் கொடுத்தாரோ தெரியவில்லை. அல்லது கிழவன் நீராகாரத்துக்குப் பதிலாக இந்த மிக்சரையே குடிப்பதென்று பழக்கப்படுத்திக்கொண்டு பொய்யான வருத்தங்களைச் சொல்கிறுனே தெரியவில்லை.

எது எப்படி இருப்பினும் எனக்கு வேறுஒரு கவலை பற்றிக்கொண்டது. ''ஒருவிஞடி தாமதித்து விட்டேனே! இல்லாவிட்டால்கிழவனுக்கு முன் நான் டாக்டரிடம் போயிருக்கலாமே! இப்பொழுது கிழவனின் இத்தனை வருத்தங்களுக்கும் டாக்டர் [illegible] கொடுத்தால் ?''

''ஐயோ எனக்கு நினைக்கவே பயமாயிருந்தது. ஆசுப்பத்திரியிலுள்ள அத்தனை மருந்துகளும் தீர்ந்துவிடப் போகின்றனவே! அங்குள்ள பெரிய பெரிய போத்தல்களிலுள்ள மருந்துகளெல்லாம் கிழவனுக்கே சொந்தமாகிவிடப் போகின்றனவே! அப்படியானுல் நான் நோயோடும் வெறும் போத்தலுடனும் திரும்பவேண்டியதுதானு?''

சிந்தனையிலிருந்து விடுபட்டு மீண்டும் கிழவனைப் பார்த்தேன். கிழவன்ஒருபடி தனது வருத்தங்களை டாக்டரிடம் ஒப்புவித்து விட்டு வருத்தம், மருந்து, உணவு சம்பந்தமான பல துணைக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

கிழவனின் கையிலுள்ளதைக் கவனித்ததும் எனக்கு ஏன் அத்தனை ஆச்சரியம் உண்டாகவேண்டும்? இத்தனை வருத்தங்களையும் உடையவன் ஆக எட்டுநேர மருந்தே கொள்ளக்கூடிய ஒரே ஒரு போத்தல்தானே வைத்திருக்கிறுன்! கிழவனுக்கு ஒருவேளை பைத்தியமாக இருக்குமோ? இல்லாவிட்டால் கிழவன் வண்டியிலோ காரிலோ வந்து அந்த வண்டியோ காரோ ஆசுப்பத்திரிக்கு வெளியே நிற்கிறதோ என்னவோ?

டாக்டரைக் கவனித்தேன். எனக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

அந்த டாக்டர் மிகவும் நல்லவர் போலிருக்கிறது. 'ஆசுப்பத்திரி தொடர்ந்து இயங்கவேண்டும். மற்றைய நோயாளிகளுக்கும் மருந்துகள் கொடுக்க வேண்டும்' என்ற பரந்தமனப்பான்மை உடையவர் போலும்! இல்லாவிட்டால் கிழவன் இரண்டு வருத்தத்தின் பெயரைச் சொல்லி முடிப்பதற்குள்ளேயே ஆக இரண்டு வார்த்தைகளை மட்டுமே கிழவனுக்குரிய தாளில் எழுதிவிட்டு 'கிழவன் எப்போ தொலைவான்' என்ற பாவனையில் அப்படி அமைதியாக இருப்பாரா?

எனக்கும் மருந்து கிடைத்தது.

ஃ ஃ ஃ

### கவலையுள்ள மனிதன்

வெளி நோயாளர் பகுதியில் எடுத்த மருந்துக்கு எனது நோய்கட்டுப்படாது மேலும் மேலும் அதிகரிக்கவே அன்று நள்ளிரவு மீண்டும் ஆஸ்பத்திரிக்குப் போனேன்; வாட்டில் தங்கும் படியாக வந்துவிட்டது.

அந்த இரவு கழியக்கழிய எனது நோயின் வேதனையும் குறைந்துவந்தது. ஆனுல் வேறெருரு கவலை என்னைப் பற்றிக்கொண்டது. ஆஸ்பத்திரிக்கு வரும்போது அவ்வளவு அவசியமற்ற தலையணை, வெந்நீர்ப்போத்தல்போன்ற பொருட்களை மறக்காது கொண்டுவந்த நாம், மிகமிக அத்தியாவசியமான சீப்பு, கண்ணுடி, பவுடர் போன்ற பொருட்களை ஏனே மறந்து போய்விட்டோம். இதுவே அந்தக் கவலைக்குக்காரணம்.

'ஒரு பெண்ணின் உண்மையான அழகைக் காணவேண்டுமானுல் அவள் காலையில் படுக்கையை விட்டுஎழும்பும் போது பார்க்கவேண்டும்' என்று சொல்லுவார்கள். இது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும்பொருந்துமே! காலையில் எழுந்து கண்ணுடி பார்த்த ஆண்கள் எல்லாருமே இதை ஒப்புக் கொள்வார்கள்.

விடிந்தால் நண்பர்கள் வருவார்கள், டாக்டர்கள் வருவார்கள், தாதிமார் வருவார்கள். இவர்களுக்கு முன் கண்ணுடி பார்க்காத-தலைவாராத பவுடர் பூசாத நான் எப்படி இருப்பேன் என்பதை நினைக்க நினைக்க வேதனை வளர்ந்தது. நோய்கூட இத்தனை வேதனை தராது போலிருந்தது.

எனக்குப் பக்கத்திலுள்ளவர்களிடம் இவைகளைக் கேட்கலாம்என்றுலோஎனது போதாத காலம் இடது பக்கத்துக் கட்டிலுக்குரிய பையன் படுநித்திரையில் இருந்தான். அடுத்தடுத்து இரண்டு கட்டில்காரருமோ வயது வந்தவர்கள். அழகு என்றுல் வீசை என்னவிலை என்று கேட்கக்கூடிய சீப்பு, கண்ணுடி, பவுடர் வைத்திருக்காத பேர்வழிகள்,

எனது நல்ல காலம் என்றுதான் சொல்லவேண்டும் நன்றுக விடியுமுன்பே எனது கவலை, வேதனை எல்லாம் போய்விட்டது. என்போன்றவர்களின் இக்கட்டான நிலைமைகளை அநுபவபூர்வமாக உணர்ந்தோ என்னவோ தெரியவில்லை, ஆஸ்பத்திரிக்குள்ளே இருக்கும் சிற்றுண்டிச்சாலையிலேயே மேற்படி பொருட்களும் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

அந்தச் சிற்றுண்டிச்சாலையை நடத்துபவர்கள் நீடூழி வாழவேண்டும்.

அடுத்தநாள்—

நான் ஆஸ்பத்திரிக்கு வந்தநாளே முக சவரம் செய்திருக்கவேண்டிய நாள்; ஆனுல் செய்யவில்லை. இரண்டு நாள் ஆனதும்முகம் கோரமாகக் காட்சியளித்தது. அந்த முகத்துடன் இருப்பது முள்ளின்மேல் இருப்பதுபோலிருந்தது. ஏதோ ஒருபடத்தில் சிவாஜி கணேசன் காட்சியளித்தது போல் காணப்பட்டேன். ஆனுல் சிவாஜி கணேசனை அந்தத் தோற்றத்தில் பார்த்து ரசித்ததுபோல் மக்கள் என்னையும் பார்த்து ரசிக்கத்தயாராயில்லை. காரணம் நான் சிவாஜி கணேசன் இல்லையே.

நான் 'சேவிங் செற்றை' ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கவில்லை. கொண்டு போய் இருந்தாலும்அத்தனை மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் நானே எனக்கு சவரவேலை செய்யவும் தயாராக இல்லை.

கவலை மலைபோல்வளர்ந்து கொண்டிருக்கும்போது—

நல்லவேளை, அங்கு ஒரு சவரத்தொழிலாளிஅடிக்கடி வந்துபோவதுண்டாம். இல்லாவிட்டால் நான் ஆஸ்பத்திரிக்கு வெளியே அதற்காக வந்து போக வேண்டி ஆகியிருக்கும்.

**ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் கடவுளின் கைவிரல்களால் வரையப்பட்ட தெய்வக் கதையாகும்.**

—ஹான்ஸ் கிரீஸ்டியன் ஆண்டர்சன்.

# தெய்வப்பூ

"மந்திரிமார் ஓடிய புதுக்கார்களெல்லாம் ஐம்பது சதத்துக்கு 'லொத்தர்' போடுறுங்களாம். நீங்களும் ஒரு ரிக்கற் எடுங்களன்."

இதுஎனக்கென்று வாய்த்த என் சகதர்மினியின் ஆலோசனை.

லொத்தரில் அதிர்ஷ்டம் அடித்தவர்களின் வாழ்க்கைச்சுருக்கத்தையும் பணக் கஷ்டத்தாலும் கடன்தொல்லையாலும் தூக்குப் போட்டுக்கொண்ட பேர்வழிகளின் துயரச் செய்திகளையும் எழுதிக் குவித்து பத்திரிகைக் கட்டுக்களை 'கட்டி' அழும் என்னைக் 'கட்டிக்கொண்ட' என் இல்லக்கிழத்தியின் கடைசி நம்பிக்கை 'லொத்தர் ரிக்கற்'றில்தான் ஊசலாடுகிறது. என்னவோ, அவர்களைத் திருப்திப்படுத்த ஈஸ்வரனாலும் முடியாது என்பார்கள்.

"உன்னுடைய ஐம்பது சதத்துக்கு அதிர்ஷ்டமடித்து உனக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான கார் கிடைத்துவிடுமென்று நம்புகிறாயா?" இது என் கேள்வி.

"எடுத்துத்தான் பார்ப்போமே. விழுந்தாலும் "

அவள் ஆசையைத்தான் ஏன்கெடுப்பான். "சரி நாளைக்கே ஒரு ரிக்கற் வாங்குவோம்" என்றேன்.

அவள் தன் வேலையைப் பார்க்க சமையலறைக்குள் நுழைந்துவிட்டாள்.

ஐம்பதாயிரம் ரூபாய் கார் கிடைப்பதென்றால்... எனக்கும் சபலம் தட்டியது.

சின்ன வயதில் கோயில் திருவிழாவில் ஐம்பது சதத்துக்கும் ஐம்பது ரூபாய்க்கும் விளையாட்டுக்கார் வாங்குவதற்கு எத்தனை ஆசைப்பட்டிருப்போம். அன்றைக்கு பொம்மைக் கோழிக் குஞ்சு ஒன்று வாங்கிய அதே ஐம்பது சதத்துக்கு இன்றைக்கு நவீன இயந்திர சாதனம் உற்பத்தி செய்த உயிருள்ள கோழிக் குஞ்சே வாங்கமுடிகிறது.

சின்ன வயதில் சின்னக் காருக்கு ஆசை. பெரிய வயதில் பெரிய கார்மீது ஆசை. ஆமாம், வயதாக ஆக வளர்வதெல்லாம் இப்படி சின்ன வயதில் தொட்டுக்கொண்ட ஆசைகள் தாமே.

ஆசை யாரைத்தான் விட்டது. மனிதன் வளர வளர ஆசையும் வளருகிறதே.

இதுதான் இன்று நாம் பெருமை அடித்துக்கொள்ளும் வளர்ச்சியா?

என் சிந்தனையில் ஓடிய இந்தத் தத்துவங்களை என் மனைவிக்குச் சொல்ல முடியுமா?

சின்னவயதில் ஒரு விளையாட்டுக் கார் வாங்குவதற்கு நான் அடம்பிடித்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது.

அந்தச் சம்பவத்தை இரைபோட்டுக்கொண்டிருந்தேன் திடீரென்றுஎன்மனக் கண்முன் கோவிந்தம்மாளும் தணிகாசலமும் வந்து நின்றனர்.

ஃ ஃ ஃ

"அம்மா, எனக்கு ஒரு தேர் வாங்கித்தா!" - முன்தாவணிச்சேலையை இழுத்துப்பிடித்தபடி கோவில் வீதியில் அடம்பிடித்தான் தணிகாசலம்.

அடுத்த கடையில் வாங்கலாம், பிறகு வாங்கலாம் என்று கோவிந்தம்மா சமாதானம் சொல்லிப்பார்த்தாலும் சமாளிக்க முடியவில்லை.

திருவிழாக்கடையில் வைக்கப்பட்டிருந்த விளையாட்டுத் தேர்கள் பார்க்க அழகாகத் தானிருந்தன தன் அருமை மகனுக்கும் ஒரு தேர் வாங்கிக்கொடுத்தால் அவனும் மற்றப்பிள்ளைகளைப் போல் விளையாடுவான் என்று அங்கலாய்த்தது அவள் மனம்.

ஐந்து சத பலூனுடனும் பத்துச்சதக் கடலையுடனும் மகனைச் சந்தோஷப்படுத்தக் கூடிய நிலையில்தான் அவளிருந்தாள். தாயின் நிலையைப் பற்றி சிறுவன் தணிகாசலத்துக்கு என்ன தெரியும்.

"தேர்வாங்கித்தா" என்ற கோரிக்கை குமுறலாகி தாயின் முன்தாவணிச் சேலையைக் கையால் பிடித்திழுத்ததுடன் நிற்காது கடித்து இழுக்கவும்தொடங்கிவிட்டான். தன்மகனுக்கு ஒரு விளையாட்டுச்சாமான் கூட வாங்கிக்கொடுக்கமுடியாமல் 'நானும் ஒரு தாய் என்று இருக்கிறேனே' என்ற வேதனை ஒரு புறமும், நிலைமை தெரியாமல்வீதியில் மானத்தை வாங்குகிறானே என்ற ஆத்திரம் ஒருபுறமுமாக மகனைத்தூக்கி இடுப்பில் வைத்தபடி விறுவிறுவென்று வீட்டை நோக்கி நடந்தாள் கோவிந்தம்மாள்.

வீட்டுக்கு வந்தபின்னும் "தேர் வாங்கித்தா" என்ற கூச்சல் ஓயவில்லை.

மகன் பவளத்தேர் கேட்டழுதான். கணவனுடன் கொண்டிருந்த கோபத்தை மறந்து மகனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக அர்ச்சுனனை பவளத்தீவுக்கு அனுப்பிவைத்தாள் அல்லி பாட்டி சொன்ன அல்லி அரசாணி மாலைக்கதை கோவிந்தம்மாளுக்கு நினைப்பில் வந்நது.

அவர் இருந்தாலும் எப்படியாவது அவன் ஆசைப்பட்ட அந்தத் தேரை வாங்கிக் கொடுத்திருப்பார்.

'கள்ளத்தோணி' என்று நாடுகடத்தப்பட்டகணவனை நினைத்துக்கொண்டபோது அவளுக்கு ஒருகணம் புல்லரித்தது! ஒருகணம்தான்!

தணிகாசலத்தைஅணைத்து வருடியபடியேபலூனைஊதிக் கொடுத்தாள், கடலையைக் கொடுத்துப் பார்த்தாள். அவன் பிடிவாதமும் அழுகையும் ஓய்ந்தபாடில்லை.

அவள் கற்பனைக்கெட்டிய மாதிரி தேர்க்கதை, திருவிழாக்கதைகள் சொல்லத் தொடங்கினாள். தணிகாசலத்தின் அழுகைகுறைந்தது.

கதைகள் முடிந்தன. "எனக்குத்தேர்கிடைக்குமா அம்மா" என்றான் சிறுவன்.

"அல்லிராணியின் மகனுக்கு பவளத்தீவிலிருந்து தான் தேர் வந்தது. உனக்கு வானத்திலேயிருந்து முத்தினாலும் பவளத்தினாலும் செய்த தேர் வரும்" என்றாள் அவள்.

"யார்கொண்டு வாருவார்கள்."

— "ஸ்ரீரங்கன்" —

"தேவர்கள்கொண்டுவந்து கொடுப்பாங்க. உன்னோடே விளையாடுவாங்க. உன்னை அழவிடமாட்டாங்க."

"தேவர்களண்டா யாரம்மா"

"தேவர்களண்டா,தேவர்களண்டா கடவுள் அம்சம் உள்ளவர்கள்."

"கடவுளிட்டே கேட்டால் தேர்கொண்டு வருவாராம்மா"

"ஓ! கடவுளிட்டே என்ன கேட்டாலும் தருவார். ஒவ்வொருநாளும் கடவுளைக் கும்பிடணும், சரியா."

"தேர் கேட்டவங்களுக்கும் கடவுள் தேர் குடுத்திருக்கிறாரா, அம்மா?

"ஓ, குடுத்திருக்கிறாரே!"

பதிலளித்த அன்னைக்கு முதல்நாள்கோவிலில் கதாப்பிரசங்கியார் தருமபுத்திரர் பற்றி நிகழ்த்திய உபந்நியாசம் நினைவுக்கு வந்தது. பஞ்சபாண்டவர் கதையைத் தான் அறிந்த அளவுக்கு சுருக்கமாகச் சொன்னாள். தணிகாசலமும் தலையை ஆட்டியபடியே கதையை ரஸித்துக்கேட்டான். "யமன் நாய் வடிவாகப் பின் தொடர்ந்து வந்து தருமராஜனை இந்திரலோக எல்லையில் விடுத்து தேவேந்திரனின் விருப்பப்படி அவரை இந்திரலோகத்தேரில் ஏற்றிச் சென்றான்" என்று கோவிந்தம்மாள் கதையை முடித்தாள். "தருமராஜனைப் போல நீயும் தருமம், நேர்மை, ஒழுக்கம் உள்ளவனாக வரவேண்டும்" என்று உபதேசமும் செய்தாள். கதாப்பிரசங்கியாரின் உபந்நியாசத்திலுள்ள இனிமையும் தெளிவும் அவள் கதையில் இல்லாவிட்டாலும், தணிகாசலத்தின் மனதில் இந்திரலோகத்தேர்மட்டும் பதிந்துவிட்டது.

எப்படியோ தனக்கும் ஒரு அழகான தேர்கிடைக்கும் என்றநம்பிக்கையில் அவன் கண்ணயர்ந்து விட்டான்.

மகனைச் சமாதானப்படுத்தி நித்திரையாக்கி விட்டபோதிலும் கோவிந்தம்டாளின் மனம் மட்டும் சமாதானமடையவில்லை.

"சின்னத்தேர் ஒண்டு வாங்கிக்குடுத்தா அவன் எவ்வளவு சந்தோஷப்படுவான்" என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்

## ஞாயிறு கதை மலர்

டாள். தன்மடிமீது தலையை வைத்து நிலத்தில் கால் நீட்டி நித்திரை செய்யும் செல்வமகனின் கன்னத்தை வருடியபடியே, "தேர்வாங்கிக்குடுத்துட்டு பார்க்கவேணும் அவற்றை கூத்தையும் கொண்டாட்டத்தையும்! ஒரே புளுகமாய்த் தானிருப்பார்" என்று வாய் புலம்பிய கோவிந்தம்மாளின் நெஞ்சிலிருந்து நெடுமூச்சொன்று எழுந்தது.

மகனை அணைத்துத் தூக்கியெடுத்து திண்ணையில் விரித்துக்கிடந்த கிழிந்த ஓலைப்பாயில் படுக்கவைத்துவிட்டு வாசல் படியில் வந்து அமர்ந்தாள்.

"இப்பவே ஒரு சின்னத் தேர் வாங்கி அவருக்குப் பக்கத்தில் வச்சா விடிய எழும்பினதும் அவருக்கு எப்படியிருக்கும்!" என்று மனதில் எண்ணியவள், மகன் சந்தோஷத்தினால் எப்படி எப்படியெல்லாம் நடந்துகொள்வான் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருந்தாள். தேர் வாங்கிக் கொடுத்துவிட்டதுபோலவும் மகன் அதைக்கண்டு ஆனந்தத்தால் கூத்தாடுவதாகவும் அதைக்கண்டு அவள் பூரிப்படைவதாகவும் கற்பனை செய்துகொண்டிருந்தாள் கோவிந்தம்மாள்.

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்ட அவள் குசினிக்குள் சென்று ஒரு தகரப் பேணியை எடுத்து அதனுள்ளிருந்த சில்லறையைக் கணக்குப் பார்த்தாள். "இதுஎந்த மூலைக்கு" என்று முணு முணுத்தபடியே தகரப்பேணியை மூடிவைத்துவிட்டு வாசல் படிக்கு வந்து சேர்ந்தவள், "பலகாரக்கடையில போய் ஐஞ்சு ரூபா கடன் கேப்பம். பலகாரம் கொடுக்கிற காசில் பிறகு கழித்துக் கொள்ளலாம்" என்று நினைத்தாள், மறுகணம், 'பலகாரக் காசைத் தரவே பிறகுவா, பேந்துவா என்கிறவன் ஒருதேவைக்கு கடன் தரப்போகிறான்?" என்று நெடுமூச்சுடன் சொல்லிக் கொண்டாள்.

தன்செல்வமகனுக்கு அருகில் போய் தனது வலது கையை மடித்து அவன் தலைக்கு அணையாகவைத்துக் கொண்டு சரிந்துபடுத்த கோவிந்தம்மாள், இடது கையால் மகனின் தலையை வருடிக்கொண்டு "எப்பிடியெண்டாலும் என்ரை ராசாவுக்கு தேர்த்திருவிழாவண்டைக்கு ஒரு சின்னத் தேர்வாங்கிக் குடுக்கிறது தான்" என்று தனக்குள் தீர்மானித்து உறுதியும் செய்து கொண்டாள்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்துவிட்ட கோவிந்தம்மாள், இந்த மண்ணுலகில் தன் வாழ்க்கைக்கு ஒரேயொரு ஆதாரமாக விருந்த தாயையும் எட்டு வருடங்களுக்குமுன் பறிகொடுத்த பின்புங்கூட மனந்தளரவில்லை. அந்த மனஉறுதிதான் அவளுக்கு அவள்தாய் விட்டுச்சென்ற ஒரே ஆஸ்தி. இல்லாதுபோனால் உறவினரின்எதிர்ப்பைக் கூடப் பொருட்படுத்தாமல் எங்கிருந்தோ வந்த ராமசாமியைக் கல்யாணம் கட்டியும் கணவனாக தன்னுடன் வைத்துவாழ முடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டும் தன் கஷ்டத்தை அடுத்தவருக்குக் கூடக்காட்டிக் கொள்ளாமல் வாழமுடியுமா? கணவன் ராமசாமி நாடுகடத்தப்பட்டு நான்கு வருடங்கள் மறைந்து விட்ட போதிலும் அவன் அவளுக்கு விட்டுச்சென்ற தணிகாசலம் என்கிற செல்வத்தை ஒரு குறைவுமில்லாமல் வளர்த்தெடுக்கவேண்டுமென்பதற்காகத்தானே கோவிந்தம்மாள் அடுப்பிலும் நெருப்பிலும் காய்ந்து ஓடாகிப்போகிறாள்.

"தணிகாசலம் பெரிய படிப்புப்படித்து பெரிய உத்தியோகம்பார்க்கவேண்டும்: பெரிய மனிதனான தணிகாசலத்தைப் பார்த்துப் பத்துப் பேர் சலாம் போடவேண்டும்" என்று கனவு காணும் கோவிந்தம்மாள் அவன் விரும்பிக்கேட்ட விளையாட்டுத்தேர் வாங்கிக்கொடுப்பதென்று தீர்மானித்து விட்டாள். தணிகாசலத்துக்கு அவன்கேட்ட சின்னத் தேர் இனிகிடைத்துவிடும். அதுவும் சுவாமி பெரிய தேரில் வீதி வலம் வரும் போது அவனுடைய கையிலும் ஒரு தேர் இருக்கும்...

தேர்த்திருவிழாவும் வந்துவிட்டது.

அதிகாலையிலேயே தனது பலகாரக்கடை வேலைகளையெல்லாம் அவசர அவசரமாக முடித்துக்கொண்ட கோவிந்தம்மாள் மகனை நீராட்டி இடுப்பில் சிறிய வேட்டிகட்டி அதன் மேல் சுவாமிப்பட்டினால் ஒரு சுற்றுச்சுற்றி முடிச்சும் போட்டாள். மகனை அலங்கரித்து அழகுபார்த்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

**கோழிப் பண்ணை கூட்டு ஸ்தாபனம்**
இல. 3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(இலங்கை)

மிகச் சிறந்த இனப் பெருக்கிற்கும்
உணவுத் தேவைகளுக்கும்

7170 இலக்கத்திற்கு போன் செய்யுங்கள்

**மாட்டுத்தீன், கோழித்தீன்**
விற்பனையாளர்கள்

**இலங்கைஎண்ணெய் கொழுப்பு கூட்டுஸ்தாபன**
பொருட்களை கையிருப்பில் கொண்டுள்ளவர்கள்.

"லேடன்" **LEYDEN**
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Cotton)

**லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்**
7, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்.

# சிறுகதை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டவள், ''தூ! கண்ணூறு படாமலிருக்க வேணும்'' என்று கவலையும் பெருமையும் கலந்தபடி சொல்லிக்கொண்டே மகனின் நெற்றியில் பெரிய கறுப்புப்பொட்டு ஒன்றை இட்டாள்.

மகனை விருந்தையில் உட்கார வைத்துவிட்டு கிணற்றடிக்குச் சென்று குளித்துவிட்டுத்திரும்பினாள். கொடியில் காயப்போட்டிருந்த சேலையை எடுத்துக்கட்டிக் கொண்டு தேர்வாங்கசேர்த்துக்கொண்ட பணத்தை எண்ணி எடுத்து சேலைத் தலைப்பில் முடிந்துகொண்டாள்.

விளையாடுவதற்குத் தேர் கிடைக்கப் போகிறதென்று தணிகாசலத்துக்கு மகிழ்ச்சி. மகனின் ஆசையை நிறைவேற்றப்போவதில் தாய்க்குத் திருப்தி.

மகனும் தாயும் கோவிலுக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

தேரைப்பற்றியும் சுவாமியைப் பற்றியும் வழிநெடுக எத்தனையோ கேள்விகள்.

முடிந்த வரைக்கும் கோவிந்தம்மாள் பதில் சொன்னாள். மகனின்புத்திக் கூர்மையைப் பற்றி அவளுக்குப் பெருமை. அடிக்கடி மகனுக்கு முத்தமிட்டுக் கொண்டாள். வழியில் அதிகம் பேசக்கூடாதென்றும் 'கோவிலடியில் ஆட்களுக்குக் கிட்டப்பேசினால் கண்ணூறு பட்டுவிடும்' என்றும் மகனை எச்சரித்தாள்.

கோயிலில்சுவாமிதரிசனம் செய்தாயிற்று. இப்பொழுது 'தேர்' வாங்குவதற்கு தணிகாசலம் அவசரப்படவில்லை. அம்மாதான் தேர்வாங்கப் பணம் கொண்டுவந்திருக்கிறாளே! இனி அவசரப்படுவது எதற்கு?

சுவாமி தேரில்எழுந்தருளுவதையும் சுவாமியைத் தேரில் வைத்தபின் எல்லோரும் என்ன செய்கிறார்களென்பதையும் தேரை எப்படி எல்லோரும் கூடி நின்று இழுக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்வதில் தான் அவனுக்கு இப்பொழுது ஆவல்.

தேர் வாங்கிவிட்டால் போதுமா? வீட்டிலும் கோயில் வைத்து விளையாட வேண்டாமா?

தேர் இருப்புக் குலைந்து நகரத் தொடங்கிவிட்டது. அடியவர் கூட்டம் வடம் பிடித்து நின்று அரோகரா கோஷம் எழுப்பி அந்தக் கோஷம் ஊட்டிய மூச்சு தணிந்து போகுமுன்பாக கடகடவென்று தேரை இழுத்துவருகிறார்கள். வடம் பிடித்து நிற்கும் அந்த அடியார்கள் அணிவகுப்பில் குஞ்சுகுருமான்களும் வடத்தைத் தொட்டுக் கொண்டு பெரியார்களின் கால்களுக்குள்ளே சிக்கிவிடாதபடி எச்சரிக்கையாக நடந்து வருகின்றனர்.

''அடடே, என்னைப்போல சிறுபிள்ளைகளும் தேர் இழுக்கிறார்களே, நானும் இழுத்தால்என்ன?'' -தணிகாசலத்துக்கு தேர் இழுக்க வேண்டுமென்ற ஆசை பிறந்துவிட்டது.

அம்மாவிடம் கேட்டான். ''வேண்டாம் ராசா! பெரியாட்களின் காலிலே தடக்குண்டு நீ விழுந்திட்டா உன்னை மிதிச்சுப்போடுவாங்க, வேண்டாமடி''- அன்னை சொன்னாள்.

மகன்கேட்கவில்லை. ''பிள்ளையைவிடன், ஒருக்காவடத்தில பிடிச்சு இழுத்துட்டு வரட்டும்'' பக்கத்தில் நின்ற ஒரு கிழவியின் சிபார்சு இது.

தணிகாசலத்தைக் கேட்கவா வேண்டும். அம்மாவின் பதிலை எதிர்பார்க்காமலே தேர்வடத்தில் போய்ப் பிடித்துக்கொண்டான்.

கோவிந்தம்மாளுக்கு அச்[illegible]தான்!

தேர் தொடர்ந்து இழுபட்டது. மகனும் கவனமாக வடத்தில் நிற்பதால் அவள் அதிகம்கவலைகொள்ளவில்லை. விளையாட்டுச் சாமான்கள் உள்ள கடைகள் மீது நோட்டம் விடுவதிலும் பொம்மைத்தேர் வைத்திருக்கும் பிள்ளைகளிடம் தேரின் விலைபற்றி விசாரிப்பதிலும் அவள் ஈடுபட்டிருந்தாள்.

திடீரென்று தேர் முட்டுக்கட்டை போட்டு நிறுத்தப்பட்டது. தேரைச் சுற்றி 'ஆ' என்ற பேரிரைச்சல். எங்கும் ஒரே பரபரப்பு. ''சின்னப்பெடியள் எல்லாம் ஒடுங்கடா'' என்று ஒருவரின் மிரட்டல். ''எத்தனை தரம் பெடியளைக் கலைக்கிறது. கேட்டால் தானே''- மற்றொருவரின் ஆத்திரக் குரல் இது.

''என்ன? என்னவாம்'' என்று எல்லோரும் விசாரிக்கிறார்கள். ஒரு சின்னப்பெடியன் சில்லுக்குள் மாட்டிக் கொண்டானாம்.

கோவிந்தம்மாளின் காதில் இது விழுந்ததுதான் தாமதம். அவளுக்கு அடிவயிறு பகீர் என்றது. துடித்துப் பதைத்து தேரடிக்குச்சென்றாள். ஜனக் கூட்டத்தை முண்டித்தள்ளி தன் மகனைத் தேடினாள். ''தம்பி! தணிகாசலம்'' என்று அவள் கூப்பிட்டாளாயினும் சத்தம் வெளிவர மறுத்துவிட்டது. அழுகைதான் வருகிறதேயன்றி ஒன்றும் செய்யமுடியாமல் அவதிப் பட்டாள்.

''சில்லுக்குள் அகப்பட்ட ... சீ...சீ... தணிகாசலமாயிருக்காது.''

''தம்பி ... ஆண்டவா முருகா என் மகனை எனக்குக் காட்டிக்கொடு அப்பனே.'' முருகனிடம் வேண்டிக் கொண்டாள்.

''சில்லுக்குள்ள மாட்டின பெடியன் யார்?'' -ஒருவரது கேள்வி.

''யார் எண்டு தெரியேல்லை. காரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிறார்கள். சின்னப்பெடியன். இடுப்பில சிவப்புச் சாமிப் பட்டு-'' பதில் சொன்னவர் வார்த்தையை முடிக்கவில்லை.

''ஐயோ தணிகாசலம் நீயாடா..'' -- தலையில் கையால்அடித்தபடி கோவிந்தம்மாள் அலறிக்கொண்டு ஓடுகிறாள்.

இரண்டொருவர் பின் தொடர்கின்றனர்.

ஆஸ்பத்திரியில் அவசரமாக தணிகாசலத்துக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

தாதிகளினதும் டாக்டர்களினதும் 'கூச்சல் போடக் கூடாது' என்ற எச்சரிக்கை நிபந்தனையுடன் மகனைப் பார்க்க கோவிந்தம்மாள் அனுமதிக்கப்பட்டாள்.

வீறி எழும் அழுகையையும் மடைதிறந்தாற் போல் கண்களிலிருந்துவரும் கண்ணீரையும் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தலையும் உடலும் துணியால் கட்டுப்போடப்பட்டு முகம் மட்டும் தெரிய படுக்கையில் கண்ணை மூடிக் கிடந்த தணிகாசலத்தின் முகத்தருகில் குனிந்து ''த...ம்...பி'' என்று மெதுவாக அழைத்தாள் கோவிந்தம்மாள்.

தணிகாசலத்தின் கண்கள் இலேசாகத் திறந்து கொண்டன. தாயைப் பார்த்தான். முகத்தில் மலர்ச்சி.

மகனின் முகத்தில் தோன்றிய பொலிவைக் கண்டு தாய்க்கு மகிழ்ச்சி.

மகனின் முகத்தருகில் அவள் தன் தலையைத் தாழ்த்தினாள். அவன் வாய் முணுமுணுத்தது, ''தே...ர் தேர்— வான...த்...திலிருந்து—''

கோவிந்தம்மாள்கைகளைக் கூப்பி அமைதியாகக்கண்ணை மூடியபடி கடவுளை வேண்டுதல் செய்தாள். அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

தணிகாசலத்தின் கண்கள் மூடிக்கொண்டன.

அன்னை கண்களைத் திறந்து மகனை வைத்தகண் வாங்காது பார்த்தாள்.

டாக்டர் தணிகாசலத்தைப் பரிசோதித்து விட்டு தாதிக்கு சைகைகாட்டினார்.

தாதி கோவிந்தம்மாளை வெளியேற்றினாள்.

எல்லோருக்கும் விஷயம் விளங்கிவிட்டது!

கோவிந்தம்மாள் அழவில்லை! அதன்பின் அவள் அழவேயில்லை!

மரண விசாரணை நடைபெற்றது. விபத்தினால் மரணம் என்பது தீர்ப்பு.

கோவிந்தம்மாளைப் பொறுத்தவரையில் தணிகாசலம் சாகவில்லை.

''வானத்திலிருந்து தேவர்கள் தேர் கொண்டு வந்து அவனை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்'' என்று தான் இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறாள்

ஃ ஃ ஃ

''என்ன ஈச்சாரில் சாய்ந்தபடியே நித்திரையா? மந்திரியாரின் காரில்இப்பொழுதே சவாரி செய்கிறீர்களா?'' என்ற என் மனைவியின் குரல்கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டேன். பாவம்! கோவிந்தம்மாளைப் பற்றி இவளுக்கு என்னதெரியும்!

# குறுநாவல்

# வானத்தாமரை

— நா. யோகேந்திரநாதன் —

நேரமாக நேரமாக அவனால் இருளையும் தனிமையையும் சகிக்கமுடியவில்லை. எழுந்து விளக்கைக்கொழுத்தினான். பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கடிதம் எழுதத் தொடங்கினான்.

அன்புள்ள சந்திரா!

நான் திக்கற்றவனாகப் பேராதனையை அடைந்த பொழுது கரம் கொடுத்துக் காத்தவர் உன் தந்தை. அந்தஸ்து என்ற சாட்டையால் அவர் என்னை அடித்த போது நான் அடைந்த ஓர் இன்பவேதனை தான் அவரிடம் அவமானம் படுவதைக்கூடப் பெருமையாக எண்ணும் அளவுக்கு என் மனம் நன்றியால் நிறைந்திருந்தது. ஆகவே, அவரிழைத்த துன்பங்கள் எனக்கு அற்பமானவை என்பதுமட்டுமல்ல அவற்றிற்காக நான் பெருமைப்படக் கூடியவையுமே.

ஆனால் நீ-அமைதி, பண்பு இவைகளால் ஆக்கப்பட்டவள். உலகத்தின் சாதாரண பெண்களை விட உயர்ந்தவள். மற்றவர்களிலிருந்து ஏதோ ஒரு சக்தி உன்னை மேம்படுத்தி வைத்திருக்கிறது. அந்தச் சக்தி ஒளிக்குள் நான் முழுமையாகக் கட்டுப்பட்டேன். உனது அந்த மென்மையான மகாசக்தியின் முன் எனது மூளை செயல்பட மறுத்தது.

சந்திரா! என் நெஞ்சத்தைக் கிழித்து நன்றாகக் காட்டுகிறேன். அதைப் பூரணமாக தெளிந்த கண்களுடனும், நடுநிலைநெஞ்சுடனும் பார்! அங்கேதெரியும்சந்திரா காதலியா? அந்த மங்கைத் தெய்வத்தை மணக்கும் அருகதை எனக்கு மட்டுமல்ல, வேறு எந்த மானிடனுக்காவது உண்டா?

இல்லை! நிச்சயமாகஇல்லை! அவள் என் காதலியல்ல. அவள் தெய்வத்தின் காதலி! ஆனால் அவள் என் நெஞ்சத்தில் நின்று தாண்டவமாடுகிறாள். அதில் ஒருதெய்வீக ஒளி வீசிகிறதே. அது எங்களைப் போன்றவர்கள் அணுகினால் அழித்துவிடும். அதைக்கட்டிக் காக்கும் சக்தி யாருக்குமே கிடையாது. ஆகவேதான் சந்திரா, உன்னைப்பொறுத்தவரையில் எனக்குப் பிறந்தது ஒருவித அன்பேயன்றிக் காதலல்ல.

ஆனால், நான் உனக்குப் பொட்டிட்டுக் கைப்பிடிப்பதாக உறுதியளித்தேனே- அது உன்மேல்கொண்டகாதலினால் என்று எண்ணினாயாயின் அது முற்றிலும் தவறு. அன்றுஉன் சக்திக்கு கட்டுப்பட்டே அவ்வுறுதி பிறந்தது. அந்த உறுதி நான் தந்தபொழுது என் நெஞ்சம் என்னிடமில்லை. அதை எடுத்து எங்கே ஒழித்து வைத்துவிட்டு நீ அந்த நேரம் உன் இதயத்தை என்னிடம் தந்திருந்தாய்! ஏமாற்றுகிறேன் என்று நினைக்கிறாயா சந்திரா? சத்தியமாகச்சொல்கிறேன் எனக்குஏமாற்றவே தெரியாது. ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி நான் உனக்குக் கட்டுப்பட்டேனே தவிர, உன்னைக் காதலித்தது கிடையாது!

சந்திரா! உன் தெய்வீக உருவம் தெரியும் என் நெஞ்சிலே இன்னும் சிறிது ஆழமாகப் பார். மருண்ட விழிகளும் துடிக்கும் இதழ்களும், செங்கனிக் கன்னங்களுமாக இதயத்தோடு இதயமாகப் பிரிக்க முடியாதவாறு ஒட்டிக்கொண்டுநிற்கிறாளே ஒரு துறுதுறுத்த பெண். அவள் தான் என் காதலி. நான் கட்டிய காதற்கோட்டையின் தனிக்கல்லான அந்தச் சாருவைத் தான் என் நெஞ்சம் அழைத்தது. சாதாரண மனித இனத்தைச் சேர்ந்த கவிஞனை நான் உலகின் ஆபாசங்களுக்குக் கட்டுப்பட்ட அவளைத் தான் காதலித்தேன்.

உறுதி வாங்கிய நீ, உள்ளத்தை வாங்கிய அவள் உங்கள்இருவருக்குமிடையே எப்பக்கம் செல்வதென அறியாது திகைத்தேன். அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண நான் எடுத்தமுயற்கியில் தோல்விமேல் தோல்வியடையவே முருகனின் உதவியை நாடி ஓடினேன். அந்த அருட்தெய்வம் சிறப்பான பாதையொன்றைக் காட்டியதால், என்னுள்ளம் சாந்தியடைந்தது. அன்பு மலர் தூவி என்னை ஆராட்ட உங்கள் இருவரையுமே ஏற்றுக் கொள்வதாகத் தீர்மானித்தேன்.

மனிதனைத் துடிதுடிக்க வைப்பதில் இறைவனுக்கு என்ன திருப்தியோ? அவன் துன்பச்சுமைகளால் அழுத்தப்பட்டு, பழக்கப்பட்டு ஓரளவு தாங்கும் சக்தியைப் பெறுகையில் திடீரென இன்பத்தைக் கொடுத்துவிடுவான். அதில் எம்மை மறக்கும்பொழுது திரும்பவும் இன்பமென்னும் மலையிலிருந்து துன்பமென்ற பள்ளந்தாக்கில் தூக்கியெறிந்துவிடுகிறான். என்னளவிலும் இறைவன் இதைக் காட்டி மறைக்கும் தன்மையைக் கையாண்டு விட்டான். என் கோர, இரக்கமற்ற விதியை ஒரு சாமியார் மூலம் எனக்குணர்த்தினர். மனைவியைப் பாடையில் பார்க்கும் பாக்கியம் பெற்றவனாம் நான். நான் இல்வாழ்வில் இறங்க ஆசைப்பட்டால் என் இணையைப்பறிகொடுத்தேயாக வேண்டுமாம்.

சந்திரா! நீயே சொல், என் இன்பமயமான வாழ்வுக்காக இன்னொரு உயிர் பறிக்கப்பட வேண்டுமா? உலகத்தின் அழிவிலே உள்ளத்தையும், உடலையும், புகழையும் வளர்த்தவர்கள் புரவலர்களாக இருக்கலாம்! ஆனால் நானோ புலவன். ஆக்கச்செழிப்பிலே மின்னும் அழகைக் கவிதையாக வடிப்பவன். எங்கள் தன்மையே மென்மை என்கிறார்களே! அப்படியான கவிஞர் குழாமின் அங்கத்தவன், இன்னொரு உயிரின் அழிவிலே இன்ப வாழ்வை எதிர்பார்ப்பானா? அல்லது எதிர்பார்க்கத்தான் முடியுமா?

சந்திரா! நான் வாழ்வில் யாரையுமே மணந்து கொள்ளப்போவதில்லை. நான் எந்த ஓர் உயிரினது அழிவுக்கும் காரணமாக இருக்கப் போவதில்லை.

உன்னை நான் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தது என்னவோ உண்மைதான். ஆனால் என்னை மன்னித்துவிடு சந்திரா! நான் கொடியவன் என்று நீ தூற்றினாலும் சரி உன் அழிவுக்கு நான் வழிகோலமாட்டேன்.

சந்திரா! உனக்காக எத்தனை இளம் விரிவுரையாளர்களும், சர்வகலாசாலை மாணவர்களும் ஏங்குகின்றார்கள். அவர்களில் யாராவது ஒருவனை மணந்து கொள். அதனால் நீயும் காப்பாற்றப்படுவாய். உன்னைப் பெற்றவரும் மகிழ்ச்சியடைவர். அதனால் என் மனதிற் கூட நிம்மதி ஏற்படலாம்.

நான் உனக்குக் காலமெல்லாம் கட்டுப்பட்டியங்கினேன். இன்று என் கோரிக்கைகளுக்கு நீ கட்டுப்படுவாயா?

உன்னைப் பொறுத்த வரையில் கட்டளையிடும் தகுதி யாருக்குமே இல்லை. ஆகவே தான் என் கோரிக்கைகளைக் கொட்டித் தீர்த்து விட்டேன். மிகுதி- உன் விருப்பம்.

அன்பான கோரிக்கைகளுடன் எனது வணக்கம்.

இங்ஙனம் உன்
சிவலிங்கம்.

(தொடரும்)

## திருடவில்லை!

நீதிபதி: நீ திருடினாயா?
குற்றவாளி: சத்தியமாக இல்லை!
நீதிபதி: அப்படியானால் நீ அந்த வீட்டின் பின் பக்கமாக வெளியே ஓடுவானேன்?
குற்றவாளி: முன் பக்கம் தான் ஒரு பொலிஸ்காரன் இருந்தானே!

○

## புதிய நிர்வாகம்!

"ஏன் சார்! இதற்கு என்ன அர்த்தம்? 'முற்றிலும் புதிய நிர்வாகத்தின் கீழ் கம்பனி நடக்கிறது!' என்று விளம்பரம் செய்திருக்கிறீர்களே! ஆனால் பழைய மனேஜர் தானே இருக்கிறார்?''

''ஆமாம், மனேஜர்முன்பு இருந்தவர் தான். ஆனால் இப்பொழுது அவருக்குக் கல்யாணமாயிற்று!''

## இலங்கையில் ஒலிபரப்பு சேவை: 5

# "சிவம் எங்கே?"

— வி. என். பி. —

ஒலிபரப்பு சேவையின் ஆரம்பகாலத்தில் பல ருசிகரமான சம்பவங்கள் நிகழ்ந்தன. அப்பொழுது 'நிலைய வித்வான்கள்' என்றழைக்கப்படும் பக்கவாத்தியக்காரர் இருக்கவில்லை. ஒலிபரப்புக்கென்று வரும் கலைஞர்களே தங்கள் பக்கவாத்தியக்காரரையும் ஒழுங்கு செய்துகொண்டு வரவேண்டும். பாட்டுக் கச்சேரிக்கு வரும் ஒருவர், கூடவே ஒரு வயலின் காரரையும், மிருதங்க காரரையும், சுருதி போடுபவரையும் சம்பளம் பேசி அழைத்துக்கொண்டு வரவேண்டும். அக்காலத்தில் கொழும்புக்குப் போய்வர இலவச ரயில் பிரயாண சீட்டு (ரயில்வே வாறன்ட்) கிடையாது. ஆதலினால் கொழும்பில் வசிக்கும் கலைஞர்களே ஒலிபரப்பு கச்சேரிகளுக்கு அழைக்கப்பட்டார்கள். இவர்கள் வாத்தியங்களையும் ஏற்றிக்கொண்டு வருவதற்கு உதவியாக ஒரு 'வான்' நிலையத்திலிருந்து அனுப்பப்படும்.

ஒருநாள் ஒரு பெண்மணி பாட்டுக்கச்சேரி செய்ய வந்தார். பக்க வாத்தியக்காரரையும் கொண்டுவந்தார். ஆனால் தம்புரா சுருதி மீட்டுவதற்கு ஆள் கிடைக்கவில்லை. அதை அவர் என்னிடம் வந்து முறையிட்டார். என்னை தம்புரா போடும்படி வேண்டினார். நிலையத்தில் தம்புரா மீட்டத் தெரிந்தவன் நான் ஒருவனே இருந்தேன். அப்பெண்மணியின் கச்சேரி முடிந்தவுடனே செய்திகளை வாசிக்கவேண்டியவனும் நானே. கடைசி நேரச் செய்திகளை மொழிபெயர்த்தாக வேண்டும். ஆகவே விஷயத்தை விளங்கப் படுத்தி தம்புராபோட முடியாதென்று மறுத்துவிட்டேன். சற்றும் எதிர்பாராத விதமாக அந்தப்பெண் 'பொல பொல'வென்று கண்ணீர் வடித்து ஓவென்று அழவும் ஆரம்பித்துவிட்டார்! இந்த பிரலாபத்துக்கு நானே முழுப்பொறுப்பாளி என்ற முறையில் நிலையத்திலிருந்த ஏனையோர் என்னை முறைத்து முறைத்துப் பார்த்தார்கள்! 'இதேதடா சர்மசங்கடம்' என்று நினைத்துக் கொண்டு தம்புராமீட்ட ஒப்புக்கொண்டேன். பத்து நிமிடம் வாசிக்கவேண்டிய செய்தியறிக்கை அன்று ஐந்துநிமிடத்தோடு முடிந்துவிட்டது. பணம் கொடுத்து அனுப்பும்போது அப்பெண்ணின் புன்னகை நன்றிதெரிவித்தது. றேடியோவில் கச்சேரி செய்யும் வாய்ப்பை இழக்க விரும்புகிறவர் மிகச் சிலரே!

இன்னொருநாள் கச்சேரி நடந்து கொண்டிருக்கும் போது ஸ்ரூடியோ விளக்குகள் அணைந்து விட்டன. ஆனால் ஒலிபரப்பு போய்க்கொண்டேஇருந்தது! இரண்டுக்கும் மின்சார ஊட்டு வேறு. பாடிக்கொண்டிருந்தவர் பாட்டுகளை மனப்பாடம் செய்யாமல் எழுதிக் கொண்டுவந்திருந்தார். எப்படியும் அவருக்கு வெளிச்சம் வேண்டுமல்லவா? 'அரிக்கன் லாந்தர்' ஒன்றைக் கொளுத்தி ஒலிபரப்பை நடத்தினோம்.

கலைஞர்கள் விசித்திரமான பேர்வழிகள். அவர்களுடைய தற்பெருமைக்கும தலைப்புளிக்கும் ஓர் எல்லை கிடையாது. சாட்சாத்கலைமகளின்சந்ததியில் வெளிவந்தவர்கள் என்று சிலர் தம்மைப் பற்றி நினைத்துக் கொள்வதுண்டு. யாராவது அபிமானிகள் சிலர் ஒன்று கூடி ஒரு கலைஞரைக்கொண்டு 'வெட்டி'க் கச்சேரி செய்வித்துவிட்டு 'சர்வ கலா பூஷணம்' அல்லது 'சங்கீத சூழுவளி' என்று இப்படி ஏதாவது வரண்ட பட்டத்தையளித்துவிடுவார்கள். வெறும்பட்டம்தானே! தாராளமாகஎவரும் வழங்கலாம். கலைஞர்களுக்கு அன்றுதொடக்கம் வால் நிமிர்ந்துவிடும். அந்தப் பட்டத்தைச் சுமந்து கொண்டு, பாவம், அதுபடும் பாடு! ஒருநாள் இப்படிப் பட்ட ஒரு 'பட்டதாரி' நிலையத்துக்கு வந்தார். தமது பட்டத்தையும் சேர்த்து அறிவிக்க வேண்டுமென்றார். இந்தியாவில் கூட வித்வான்களின் பட்டத்தை அறிவிப்பதில்லை. அப்படி அறிவித்தால் சில புகழ்பெற்ற வித்வான்களுக்கு அளிக்கப்பட்ட பட்டங்கள் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டிருக்கவே நேரம் சரியாகிவிடும். இதைநான் அவருக்குவிளங்கப்படுத்தினேன். அவர்விளங்கிக்கொள்ள மறுத்துவிட்டு என்மீது காய்ந்துகொண்டார். அன்றைய கச்சேரி எப்படியோ நடந்து முடிந்தது-பட்டம் பறக்காமல்தான்! அதற்குப் பிறகு அவர் றேடியோவுக்கு வருவதில்லை.

பண்டிதர் சிவம் கருணாலய பாண்டியனார் அடிக்கடி நிலையத்துக்கு பேச்சுகளுக்கு வருவார். ஒருநாள் அவருடைய பேச்சு மாலை6மணிக்கு ஏற்பாடாயிருந்தது. நண்பர் சிவபாதசுந்தரம்தான் அவருடைய பேச்சை அறிவிக்க வேண்டும். இவரை நாங்கள் 'சிவம் சிவம்' என்று அழைப்போம். பேச்சாளர் வெளியே காத்துக் கொண்டிருந்தார். 6 மணி அடித்து ஒரு நிமிடமாகியும் நேரத்தை நிரப்பும் இசைத்தட்டுத்தான் ஓடிக்கொண்டிருந்தது. பேச்சைக் காணோம். செய்திகளை மொழிபெயர்த்துக்கொண்டிருந்த நான் நண்பர் சிவத்தைத் தேடிக்கொண்டு ஸ்ரூடியோப் பக்கம் ஓடினேன். அவரை எங்கும் காணவில்லை. களைக்க இளைக்க ஓடிவந்து 'சிவம் எங்கே' என்று பண்டிதரைக்கேட்டேன்.

பாண்டியனாரின் முகத்தில் அப்பொழுது ஆச்சரியம் மட்டுமல்ல — வியப்பும், ஒன்றுமே புரியாத குழப்பமும் தோன்றின. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லத் 'தெரியாத சிறு குழந்தைபோல் என்னைப் பரிதாபமாகப்பார்த்தார். சரியாக ஒரு நிமிடம் கழித்து 'எந்த சிவர்?' என்று என்னிடமே திருப்பிக் கேட்டார்!

என்னுடைய சிரிப்பு அடங்க வெகு நேரமாகிற்று. நண்பரும் சிவம், பேச்சாபண்டிதரும் சிவம்! சிவசிவ, சில சமயங்களில் இப்படி எத்தனை நெருக்கடி!

(தொடரும்)

# கறுப்பு அடிமையும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கள். தாங்கள் பிறந்த நாடுகளிலிருந்து கூட்டம் கூட்டமாக வந்து அதே கட்டுக்கோப்புக் குலையாமல் வாழ்ந்து வந்தனர். இது பெரும் பிரச்னையை ஏற்படுத்தியது.

முதலாவதாக—

எவ்வளவு குறைந்த சம்பளத்திலும் இவர்கள் வேலை செய்யத்தயாராகஇருந்தார்கள். ஆங்கிலத்தொழிலாளரிடையே இது பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியது. தங்களுக்குப்போட்டியாக வந்த இந்தக் கறுப்பர்களைத் தொலைத்து வைக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டினார்கள்.

இரண்டாவதாக —

இவர்கள் தொகையாய்க் குடியேறிய இடங்களில்சுகாதாரம் பாதிக்கப்பட்டது. ஒரு சிறிய அறைக்குள் எட்டுப் பத்துப்பேர் நித்திரை செய்யவும் இவர்கள்தயங்கவில்லை. ஆதலினால் வியாதிகள் பரவுவதற்கு ஏதுவாகவிருந்தது.

மூன்றாவதாக —

ஒரு சில ஆங்கில இளைஞர்களுக்கு கறுப்பு யுவர்கள் ஒருவித போட்டியாகவும் அமைந்தார்கள். கறுப்பர்களின் உடல் வலிமையும், கவர்ச்சியும் சில ஆங்கிலப் பாவையர்களைக் கவர்ந்தன. எனவே, ஆங்கிலப் பாவையர் கறுப்பர்களைப் பெரிதும் விரும்பினார்கள். இதுபெரிய கசப்பை உண்டுபண்ணியது. வெள்ளை இனத்தில் வேற்று இரத்தம் கலந்து இனமே நசுங்கிவிடுமென்று வாதிட்டனர், ஒரு சிலர்! இன்னும் பலர் கறுப்பர்களை வெளியேற்றினால் அன்றி ஆங்கில நாட்டுப் பிரஜையின் பொருளாதாரம் சீராகாது என்றனர்.

இப்படிப் பல குரல்கள் சேர உண்டாகியது தான் 'நோட்டிங்ஹாம்' கலகம் என்று சொலலப்படும்இனக் கலவரம்.

1959-ம் ஆண்டு- வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் மேற்சொன்ன நகரில் குழப்பங்கள் ஏற்பட்டன. கத்திகள், 'பைசிக்கிள் செயின்' முதலிய ஆயுதங்களால் கறுப்பர்கள் பகிரங்கமாகத் தாக்கப்பட்டனர். கொலைகளும் நடந்தன. மோஸ்லி என்ற ஹிட்லரைப் போன்ற அரசியல்வாதியும் நெருப்பில் எண்ணையை வார்த்தது போல இந்தக் கலகத்தில் பங்குகொண்டான்.

ஆங்கிலப் பொலிசார் சும்மா இருந்துவிடவில்லை. கலகம் மற்ற நகரங்களுக்குப் பரவவிடாமல் பலத்த காவல்போட்டு அடக்கினர். அத்துடன்நில்லாமல் கலகம் நடத்திய குற்றத்திற்காக ஆங்கில இளைஞர்களை (கலகக்காரர்களை) கோர்ட்டில் நிறுத்தினர்.

கனம் குக் அவர்களுடைய பரம்பரையில் வந்த சல்மண்ட் என்ற நீதிபதி அனுபவம் மிகக் குறைந்தவர்- அவர் வக்கீல் தொழிலை விட்டு நீதிபீடத்தில் ஏறிச் சொற்ப காலம். மேலும் அவர் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியல்ல. சாதாரணஒரு மாஜிஸ்டிரேட். ஆகையினால் இந்தக் கலக வழக்கில் அவர் அளித்த தீர்ப்பு அவரை எந்நாளும் எல்லார் நாவிலும் திகழும் பெரியவராக்கிவிட்டது.

''இந்த நாட்டில் எவருக்கும் சம உரிமையுண்டு. இனமோ - அன்றி நிறமோ இந்நாட்டில் ஒருவன் தலைநிமிர்ந்து நிற்பதைத் தடுக்க முடியாது'' என்று தீர்ப்பளித்த நீதிபதி சல்மண்ட் குற்றவாளிகளைப் பார்த்து ''இது போன்ற குற்றம் புரிபவர்கள் தேசத்துரோகிகள்; நாட்டின் அமைதியைக் குலைத்து நல்ல பெயரைப் பறிக்கிறீர்கள்-உங்களுக்கு என்ன தண்டனை கொடுப்பினும் தகும்'' என்று கூறினார்.

குக் அவர்கள் முன்னைய வழக்கில் தீர்ப்பளிக்கும் போது, ''இந்தக் கறுப்பன் விடுதலையாகட்டும்'' என்று கூறிய வாக்கியம் சல்மண்ட் அவர்களின் இத்தீர்ப்புக்கு 'கரு'வாக அமைந்திருக்கிறதல்லவா?

# 'யாருக்குச் சொந்தம்'

(நாடகம்)

நாடக வளர்ச்சி மிக வேகமாக முன்னேறிவரும் இந்நாளில், 'யாருக்குச் சொந்தம்' என்னும் நாடகத்தை சென் சாள்ஸ் பாடசாலை மண்டபத்தில் தர்மா புரடக்ஷன்ஸார் 3-7-65-ல் மேடையேற்றினர்.

நாடகம் தொடங்குகிறது. பாலும் மணியும் நண்பர்களாகிறார்கள். சிவசாமியின் போலிவாழ்வு அம்பலமாகிறது. வேலையற்று, வீண் பொழுதுபோக்கி, குடித்துக்கொண்டு திரியும் சிவசாமியின் வீட்டு வறுமையைப் போக்குவதற்காக ''பாலு'' பெரிய கடையில் வெற்றிலை வியாபாரம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. பாலுவின் உழைப்பைக்கொண்டு குடும்பத்தை ஓரளவு ஓட்டுகிறாள் மதனி. வாழ்வில் ஏற்பட்ட வேதனையும் வெறுப்பும் அவளை நோயாளியாக்குகிறது. மிதமிஞ்சிய குடியால் சிவசாமியின் உடல் நிலை மோசமாகிறது. தகப்பனின் துர்நடத்தையால் மனமுடைந்த பாலு, தானும் மணியும் ஒரே வயிற்றில் பிறந்தவர்களென்பதை அறியும்போது மதனி இறந்து விடுகிறாள். மதினியின் மரணம் சிந்திக்க வைக்கிறது சிவசாமியை. தான்இறந்துவிட்டால் பாலுவின் எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி அவனுள் எழும்போது திடீரென்று மரணமடைகிறான் சிவசாமி. வேதனையோடு நண்பன் மணியிடம் சென்ற பாலுவை சர்மா ஐயர் வீட்டை விட்டு விரட்டுகிறார். அநாதரவான நிலையில் மீண்டும் வெற்றிலைப் பெட்டியுடன் வெளியேறும் பாலு தன்னைத்தானே கேட்கிறான்''நான்யாருக்குச் சொந்தம்'' என்று. இத்துடன நாடகம் முடிவடைகிறது,

கதை, வசனம் எழுதிய ஆர். எம். இராசு சமூகத்தில் சாதாரணமாக நாம் காணும் காட்சிகளைப் படைத்து புதிய முறையில் கதையை உருவாக்கியது போற்றுதற்குரியது. ஆனாலும் சில பாத்திரங்களின் வசனத்தை தேவையற்ற விதத்தில் கூட்டிவிட்டமையினால் அடுத்த பாத்திரத்தின் உணர்ச்சிகரமான நடிப்பு எடுபடாமல் போய் விடுகிறது. இதை நீக்கின் கதையில் குறை கூறமுடியாது.

கருத்தைக்காணத் துணை செய்வது கலையென்றபடியால், யாருக்குச்சொந்தம் எனும் இந்நாடகமூலம் ரசிகர்களைச்சிந்திக்க[illegible]வைத்திருக்கும் நாடக[illegible]ஆசிரியர் இராசுவை நாம் மறக்க முடியாது.

இதில் எழுத்தாளன் மாதவனாக நடித்த ஆனந்தன் பாத்திரங்களை உணர்ந்திருப்பினும், வசனங்களை விரைவாகப் பேசியதனால், அவர் நடிக்கிறார், ஆனாலும் வெறும் நடிப்பாகவே போய்விடுகிறது.

சிவசாமியாக நடித்த அன்ரனி வசனங்களை மென்று விழுங்கியதனால் அப்பாத்திரத்தையே கெடுத்துவிடுகிறார். முயற்சியெடுப்பின் முன்னுக்கு வரமுடியும்.

மதனியென்ற பாத்திரத்தைஏற்று நடித்த க. யோகராசா பெண்ணாகவே மாறிவிட்டார். இருந்தாலும் சிற்சில கட்டங்களில் தன்னை மறந்து பேசாமல் நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.

மதனியின்தகப்பன் சர்மா ஐயராகத் தோன்றிய ஜோர்ஜ் பாத்திரமாகவே மாறியிருப்பினும், உணர்ச்சி வசப்படாது, சாதாரணமாகவே நடித்திருக்கலாம். ஆசிரியை பாத்திரத்தை ஏற்று நடித்த குமாரி கலா ஓர் ஆசிரியையே நமக்கு நினைவூட்டுகிறார்.

மற்றும் சிறுவர்களாக நடித்த ஜோர்ஜ் எல்மோவும், பொ. ஜெயகுமாரும் முற்றிலும் திருந்தவேண்டும். ஏனென்றால் இவர்கள்மூலமாகவே கதை சிறப்படையமுடியும்.

மாதவன் வீட்டை ஓர் உண்மை வீடாகவே நினைக்கும்படி அமைத்திருப்பது காட்சி அமைப்பாளரின் திறமையைக் காட்டுகிறது.

ஒவ்வொரு காட்சிக்கும் பொருத்தமான பாட்டுகளைப்பாடி மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருப்பினும், ஒலி, ஒளியமைப்புச் சிறந்த முறையில் இல்லாததனால் ரசிகர்களுக்குச் சில இடங்களில் சலிப்புத்தட்டுகிறது.

—எ. ஆர். அருளானந்தம்.


மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
*Agents:*
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

# கிளிநொச்சி கமக்காரருக்கு இலவச விதைநெல்

## இம்மாத முடிவுக்குள் கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு கிளிநொச்சித் தொகுதி கமக்காரருக்கு, இலவச விதைநெல் கொடுப்பது பற்றி கிளிநொச்சி எம். பி. கமத்தொழில்உணவு மந்திரி திரு. எம். டி. பண்டாவுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். இதுபற்றி யாழ்ப்பாண அரசாங்க அதிபருடைய அறிக்கை கிடைத்ததும் தாம் நடவடிக்கை எடுப்பதாக எம். பி. க்கு மந்திரி பண்டா உறுதியளித்துள்ளார்.

திரு. கா. பொ. இரத்தினம் இலவச நெல் வழங்குவது பற்றிய அறிக்கையை உடனே அனுப்பிவைக்குமாறு அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீராவுக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளார். இம்மாத முடிவுக்குள் கிளிநொச்சிக் கமக்காரருக்கு விதைநெல் இலவசமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரபல திருமணம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு வெள்ளவத்தையி லுள்ள பி. டி. சி. ஸ்தாபன மனேஜர் திரு. ஆ. அருட்பிரகாசத்தின் புதல்வன் செல்வன் புலேந்திரனுக்கும் (நீர்ப்பாசன எஞ்ஜினியர்) வெள்ளவத்தையிலுள்ள இ. போ. ச. பிரதம அக்கவுண்டன்ட் திரு. மு. நமசிவாயத்தின் புதல்வி செல்வி கலாவல்லிக்கும் சென்ற சனிக்கிழமை காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. முக்கிய பிரமுகர்கள் பலர் திருமணத்துக்குசமுகமளித்திருந்தனர்


## நீங்கள் ஒரு கைத்தறி நெசவாளரா?

அப்படியானல் மாசம் ரூ, 150-க்குக் குறையாமல் உங்கள் திறமைக்கேற்ப இன்னும் மேலதிகமாக உங்களால் உழைக்க முடியும். வவுனியாவிலுள்ள சாந்தி நெசவுசாலைக்கு கைதேர்ந்த ஐந்து நெசவாளர்கள் உடனடியாகத் தேவை, இருபாலாரும் மனுப்பண்ணலாம். தங்குவதற்கு இடவசதி, சாப்பாட்டுக்கு தொழிற்சாலைக் கூட்டுவிடுதி உண்டு. பெண்களுக்கு சகல வசதிகளும் பிரத்தியேகம்.

ஒரு குறிப்பு: தற்பொழுது தொழிற்சாலைவிடுதியில் பெண்கள் பகுதியில் 12 பெண்கள் தங்குகிருர்கள். அவர்களுக்குச் சென்ற மாதத்துச் சாப்பாட்டுச்செலவு தலைக்கு ரூ. 23-50 தான்.

அதிக ஊதியம், குறைந்த வாழ்க்கைச் செலவு. உடனே சகல விபரங்களுடன் கடிதமூலமாகவோ நேரடியாகவோ மனுச்செய்யுங்கள்.

வெளிக்குளம், வவுனியா,

நிர்வாகி
சாந்தி நெசவுசாலை



மகத்தான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த



# லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!


## உங்கள் இராசிபலன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

புத்திரகஷ்டங்கள், சுரபயம், குடும்பத்தில்பணமுடை ஆகியன காணப்படுகின்றன,

**மகர இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில்உட்டணம்காரணமாக சரீரமெலிவு வயிற்றில் இடையிடை ரோகம் காணல், பிரயாணக் கஷ்டம், ஊழியர்கள் உதவி, தேகமெலிவு, வீணரால் கஷ்டங்கள் ஏற்படல், செலவுகள் அதிகரித்தல், குடும்பத்தில் சற்று நிம்மதி காணல், புத்திரகாலம் செய்தொழில் குன்றல், கமம்-கல்வி - வர்த்தகம்- உத்தியோகம் மத்திமபலிதம், வாக்கினல் கஷ்டங்கள் விழைதல், பெண்களுக்கு உடல் ரோகம், யோசனை, மதிப்புக்குறைதல், ஆண்களால் ஏமாற்றப்படல் ஆதியன காணப்படுகின்றன.

**கும்ப ராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழிற் சிறப்பு, பொருள் வரவு, பெண்களாலும் துட்டராலும் கஷ்டங்கள் விளைதல், பொருட்செலவுகள் அதிகரித்தல், தேகத்தில் ரோகம் - மெலிவு காணல், சத்துருக்களால் ஆயுதபயம், கடன்பட்டு தொழில் விருத்தியாக்கல் ஆதியனவும் கமம் மத்திம பலிதமும் உத்தியோகம் சிறப்பு- ஊழியர், அதிகாரிகள் உதவி கிட்டல், பொறுப்பு அதிகரித்தல், கல்வி பரீட்சைகள் சித்தியாதல், பெரியோர் உதவி கிடைத்தல், வர்த்தகத்துறையில் புதிய அபிவிருத்திகள் ஏற்படல், கொடுக்கல் வாங்கல் கஷ்டங்கள் குறைதல், பெண்களுக்கு இடையிடை பணவரவு ஆதியன காணப்படுகின்றன.

**மீன ராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் எதிர்பாராத வழிகளில் இலாபம் கூட்டல், செய்தொழில்கள் மூலம் பொருள் வரவு, குடும்பத்தில் வீண் சச்சரவு- உடல்ரோகம், சத்துருக்களால் வம்பு வழக்குகள் ஏற்படல், புத்தித்தடுமாற்றம், கல்வித்துறையில் மத்திம பலிதம், பயனற்ற பிரயாசைகள், வர்த்தகத்துறையில் ஓரளவு அபிவிருத்தி காணப்படல், உத்தியோகத்துறையில் நற்பலன் கிட்டல், அதிகாரிகள் உதவி, பணவரவு,


**தேவை**

பெண் விற்பனையாளர்கள் தேவை, நாள் சம்பளம் ரூபா 10-00, விநாயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூண்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். 631



REGAL - JAFFNA
NOW SHOWING
James Mason
John Mills
in
TIARA TAHITI
(Eastman color)


## மரண அறிவித்தல்

**மீனுட்சி**

காலம்சென்ற ஏகாம்பரம் அவர்களின் மனைவியும், அரியாலை ஆயுள்வேத வைத்தியர் நல்லையா அவர்களின் தயாருமாகிய மீனுட்சி காலம் சென்றுவிட்டார். அன்னரின் பூதஉடல் 11-7-65 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அரியாலை கனகரட்ணம் ரோட்டில் உள்ள 16-ம் இலக்க இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும். 640

# ஆசிரியர்களை அரசியல்வாதிகள் கட்டுப்படுத்துவது ஒவ்வாதது

## ஆசிரியர் சங்க பொதுக் கூட்டத்தில் தலைமையுரை

யாழ்ப்பாணம், ஞாயிறு "சமூகப் பொறுப்பு,நாட்டின் பண்பாடு. பொருளாதார வளர்ச்சி பிள்ளைகளின் ஆத்மீக, லௌகீக தேவைகள் போன்றவற்றைத்தழுவி நிற்கும் கல்வி அரசியலுக்கு அப்பாற்பட்டது. அரசியல் வாதி பெரும்பான்மை வாக்குகளைப்பெற முயலும் சந்தர்ப்பவாதியாக இருக்கிறபடியால உயர்ந்த இலட்சியங்களைக்கைவிட்டு, சுயநலத்தையே பெரிதும் விரும்புபவனுகவே இருக்கிருன். ஆகையால் ஆசிரியர்களை அரசியல்வாதிகள் கட்டுப்படுத்துவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று திரு. மு. பேராயிரவர் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 50-வது வருடாந்த கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## பருளை விநாயகர்

4-ம் பக்கத் தொடர்ச்சி

விடாது தடுத்தது. இதனல் இவ்விநாயகருக்கு "கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார்" என்னும் பெயர் உண்டாயிற்று.

சின்னத்தம்பிப் புலவர் பருளையில் எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானைத் தலைவராகக் கொண்டு புதுமை இலங்கியங்களில் ஒன்றுன பள்ளுப்பண்புகள் பொதிந்த ஓர் இலக்கியத்தைப் 'பருளை விநாயகர் பள்ளு' எனப்பாடியுள்ளார்.

இப்படியான புதுமையுடைய பழமையான விநாயகராலயத்தில் ஆனிமாதத்தில் திருவிழா நடைபெறும். பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான், விநாயகர் ஆகிய இருவருக்கும் ஒரே தேர்தான் இருக்கின்றது. இத்தேரிலுள்ளசிற்பங்கள் பார்ப்பவர் மனத்தைக் கவர்வன. இத்தேர் மிகவும் பழமையானதாகும்.

இவ்வூரிலுள்ள இரு தெய்வங்களும் தீர்த்தமாடுவதற்காக திருவடி நிலை என்று அழைக்கப்படும் புண்ணிய தீர்த்த ஸ்தலத்திற்குச் செல்வார்கள். இந்த ஸ்தலம் பருளையிலிருந்து இரண்டு மைல் தூரம்வரைஇருக்கும்.

விநாயகராலயத்தில் பூசை செய்பவர்கள் சைவக்குருமார்கள். பூசகர்கள் ஆசாரமாக பக்தியுடன் இங்கு பூசை செய்வதே எம்மைப் பரவசப்படுத்தும். பக்கத்தில் இருக்கும் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிராமணக்குருமார் பூசை செய்து வருகின்றூர்கள்.

இக்கோவில்களில் விழாக்கள் திறம்பட நடைபெறுவதற்கு இக் கிராமத்திலுள்ள மக்கள் அனைவருமே பொறுப்புள்ளவராகின்றனர்.




குதுகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே! இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம்,தடிமன்,நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள சகல சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த விற்பனவு உரிமையாளர்:

யாழ்ப்பாணம்: எஸ். சுப்பிரமணியம் அன் கோ.
53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கரவெட்டி: நடன முருகன் மருந்துச்சாலை,
நெல்லியடி, கரவெட்டி.



டப்ளியூ. கே. ஜினதாஸ
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோட்,
கொழும்பு-11.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.